ான் நெ' 15. விலை 2 அணு. REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 12 4—10—53 இதழ் 13

நாம் அரக்கர்களாம்!

ஆணவத்தோடு கூறுகிறுர் ஆச்சாரியார்

விபரீதபுரிக்குப் பயணமாகாதீர்!

வீண் வம்பை வளர்க்காதீர்!

போக்கை மாற்றிக்கொள்ளும்

[அடிகள்]

★

யாராய் இருந்தால் என்ன? உண்மையை ஒளிவுமறைவின்றிக் கூறினுல், அப்படிப்பட்டவர் களுக்கு நன்றி செலுத்தவேண்டியதுதானே! அதிலும், பலகாலமாகவேமறைத்து வைக்கப் பட்டிருந்த ஒரு உண்மையை ஒருவர் கூற முன் வருகிறுர் என்றுல்; அப்படிப்பட்டஒருவருக்கு அவசியம் நன்றி செலுத்தித்தானே ஆகவேண்டும். அதுமட்டுமல்ல, யார் அந்தஉண்மையைமறைத்து வைத்திருந்தார்களோ—மறைத்து வைக்கப் படவேண்டிய ஒன்று என்று கருதியிருந்தார்களோ, அவர்களே இப்போது, அதனை அம்பலப்படுத்துகிறுர்கள் என்றுல், அவர்களைச் சும்மா விட்டுவிடலாமா? அவர்கள் எங்கிருந்தாலும், அங்கு சென்று அவர்களை நேரில் பார்த்து, "ஐயா உங்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி உரித்தாகுக" என்று கூருமல் இருக்கலாமா? எனவேதான், உண்மையை உரைப்பவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டுமென்ற தமிழ் மரபுப்படி; கொன்றன்ன இன்னு செய்யும் ஒருவருக்கு நன்றி செலுத்துகிறேன். ஜனநாயகத்தைப் படுகொலை (சித்ரவதை) செய்து கொண்டிருக்கும் ஆச்சாரியார், என்ன காரணம்பற்றியோ, ஒரு உண்மையையும் கூறிவிட்டார். தேவர்கள் யார்? அரக்கர்கள் யார்? என்றபேருண்மையை—நாம் பலகாலமாகவே கூறிவரும் ஒரு வடிகட்டிய உண்மையை, ஆச்சாரியார் அச்சமின்றிக் கூறிவிட்டார்.

அன்றொருநாள், பண்டிதநேரு தம்முடைய புதல்விக்கு எழுதிய கடிதமொன்றில் ஒரு உண்மையைக் கூறினுர்.

இன்று, ஆச்சாரியார், பொதுமக்களை வரவழைத்து, அவர்கள் மத்தியில் நின்றுகொண்டு ஒரு உண்மையைக் கூறுகிறுர்.

தென்னுட்டில் வாழ்ந்துவரும் திராவிடர்கள்தான், இராமாயணத்தில் வானரர்கள் என்று அழைக்கப்பட்டதாகப் பண்டிதநேரு அன்று கூறினுர்.

இப்போது தென்னுட்டில் வாழ்ந்துவரும் திராவிடமக்களை அரக்கர்கள் என்று ஆச்சாரியார் கூறுகிறுர்.

பண்டிதநேரு, தம்முடைய ஆராய்ச்சியின் பயனுகத் தாம்கண்ட உண்மையை எடுத்துக் கூறினுர்.

ஆச்சாரியார், தம்முடைய ஆணவத்தின் அளவை எடைபோட்டுக் காட்டுவதுபோல் அரசியல்புராணம் பாடுகிறுர்.

இதிகாசத்திலே, திராவிடர்கள் வானரர்களாக்கப்பட்டனர்.

புராணத்திலே, திராவிடர்கள் அரக்கர்களாக்கப்படுகின்றனர்.

பண்டித நேருவின் ஆராய்ச்சி பகுத்தறிவுள்ளவர்களால் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

ஆச்சாரியாரின் ஆராய்ச்சி ஆணவத்துக்கு அலங்காரம் செய்வது போன்ற ஒரு உரையாகும்.

*

புராணத்திலே பேசப்படும் 'அந்தத் தேவாசுரர்களுக்கும்' இன்றைய அரசியல் கட்சிகளுக்கும் என்ன சம்பந்தம்? அரசியலை ஏன் புராணமாக்குகிறார்? புராணத்தில், திராவிடர்கள் இழிவுபடுத்தப்பட்டது போதாது. திராவிடர்கள் எங்கிருந்தாலும், அரக்கர்கள்தான் என்பதை நிலை நாட்டுவதுதான் எங்கள் பணி—கடமை என்று ஆச்சாரியார் கூறுகிறார். எனவேதான், ஒரு அரசியலமைச்சர் ஆண்டவன் பிரதிநிதியுமாகி, யார் தனக்கும் தன் இனத்துக்கும் வாழ்வளித்தார்களோ, அவர்களை வதைக்கிறார்.

புராணங்கள் எல்லாம் புனைந்து கூறப்பட்டவை—அவற்றில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாம் கட்டி எழுதப்பட்டவை என்பது ஆச்சாரியார் போன்ற மத ஆஷாடபூதிகளால் கூட ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

*

தேவர்கள்—என்றால் காங்கிரஸ்காரர்கள்.

அரக்கர்கள்—என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அல்லது திராவிட இயக்கத்தினர். இது ஆச்சாரியாரின் புதுப் புராணம் கூறும் உண்மை.

காங்கிரஸ்காரர்களைத் தேவர்களாக்கி, திராவிட இயக்கத்தினரை அரக்கர்களாக்கிக் கூறுவதில் பெருவிருப்பங்கொண்ட ஆச்சாரியார்—கற்பனையுலகில் கனவேகமாகச்செல்லும் ஆச்சாரியார், தேவாசுரப் பண்பாட்டையும் ஒரு சிறிது ஆராய்ச்சி செய்திருக்கிறார். அதாவது, தேவர்களின் செயல்கள் பொதுநலத்தையும், அரக்கர்களின் செயல்கள் சுயநலத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்பது ஆச்சாரியாரின் கண்டுபிடிப்பு. யார் பொதுநலவாதிகள்? யார் சுயநலவாதிகள்? என்பதைக் கண்டு பிடிப்பதற்கு முன், ஒரு சந்தேகத்தை வாசகர்களுக்குத் தெளிவுபடுத்திவிடுகிறேன்

புராணக் கூற்றின்படி, தேவர்கள் என்றால், பிராமணர்கள் என்று பொருள். அதாவது, பூமியில் வாழும் பிராமணர்களைப் 'பூதேவாள்' என்றும், வானில் வாழ்பவர்களைத் 'தேவாள்' என்றும் புராணம் கூறுகிறது.

ஆச்சாரியாரின் ஆராய்ச்சிப்படி, காங்கிரஸ்காரர்கள் எல்லாரும் தேவர்கள் என்றால், காங்கிரசில் இருப்பவர்கள் எல்லோருமே பிராமணர்கள்தானா என்ற கேள்வி பிறக்கிறது. காங்கிரசில் இருப்பவர்கள் எல்லோரும் பிராமணரல்ல. பிராமணரல்லாதாரும் காங்கிரசில் இருந்தனர்—இப்பொழுதும் சிலர் இருக்கின்றனர். அப்படியானால், ஆச்சாரியாரின் ஆராய்ச்சி தவறானதா? காங்கிரசில் இருப்பவர்களைத் தேவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசியது குற்றமா? அல்ல! அல்ல! முற்றிலும் உண்மையே!

காங்கிரஸ் என்றால் தேவர்கள், தேவர்கள் என்றால் பிராமணர்கள். பிராமணர்கள் என்றால்.........விளக்கம் தேவைப்படுகிறதா?

பிராமணர்களின் நன்மைக்காகவே — பிராமணர்களின் முன்னேற்றத்துக்காகவே — பிராமணர்களுக்குச் செல்வாக்குத் தேடித்தருவதற்காகவே காங்கிரஸ் ஸ்தாபனம் பாடுபடுகிறது.

இந்த மறுக்க முடியாத உண்மையை அடிப்படையாக வைத்துத்தான், ஆரம்பத்தில் ஆச்சாரியாருக்கு 'நன்றி' கூறினேன். காங்கிரஸ், பார்ப்பனரின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் ஒரு சுயநல ஸ்தாபனமாக மாறிவிட்டதென்பதனை நாம் இப்பொழுது மட்டும் கூறவில்லை. காங்கிரசில் இருப்பவர்களை ஆச்சாரியார் தேவர்களாக்கியதைக் கண்டதால் இப்படிக் கூறுகிறோம் என்று எண்ணிவிட வேண்டாம்.

காஞ்சிபுரம் மாநாட்டிலிருந்தே நாம் இந்த உண்மையைக் கூறி வருகிறோம்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான், எல்லோருக்கும் நல்லவராக வாழ்ந்து மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார், ஈ. வெ. இராமசாமிப் பெரியார், டாக்டர் பி. வரதராஜுலு போன்ற பார்ப்பனரல்லாத தலைவர்கள் காங்கிரசில் இருந்து விலகினர். ஜாதி, மத வித்யாசமின்றி எல்லோருக்கும் பொதுவாக இருந்து பணியாற்றி வந்த காங்கிரஸ் ஸ்தாபனம், நாளடைவில் பார்ப்பன முன்னேற்ற ஸ்தாபனமாக மாறி விட்டதை அறிந்ததாலேயே, மானமுள்ள பார்ப்பனரல்லாத தலைவர்கள் எல்லோரும் காங்கிரசில் இருந்து விலக வேண்டியவரானார்கள். இதே போலவே, முஸ்லீம் தோழர்களும் பிறரும் காங்கிரசிலிருந்து வெளியேற வேண்டியவரானார்கள். இது உலகறிந்த இரகசியம்.

*

இரண்டே கட்சி ஒன்று வெள்ளைக்காரன் ஆட்சி, மற்றது காங்கிரஸ் இப்படி இருந்த ஒருநிலை ஏன் மாறிற்று? உப்புப் பொதியோடு ஆற்றில் இறங்கிய கழுதை காலிப் பையோடு கரை ஏறியதுபோல் காங்கிரஸ் ஏன் கரைந்தது? பொதுநல ஸ்தாபனம் சுயநல ஸ்தாபனமாக மாறி விட்டதாலேயே என்பதைத்தவிர காங்கிரசின் கரைவுக்கு வேறு காரணம் கூற முடியுமா?

*

காங்கிரசில் இருப்பவர்கள் தேவர்களாம்! அவர்கள் பொது நலத்திற்காகப் பாடுபடுபவர்களாம். நாம் (திராவிடர்கள்) அரக்கர்களாம் சுயநலத்திற்காகப் பாடுபடுபவர்களாம்! இதற்கு மேற்கோள் புராணத்தில் இருக்கிறது—இதிகாசத்தில் இருக்கிறது, பாருங்கள் என்று கூறுகிறார். இந்திரசித்தின் தவத்தை எடுத்துக் காட்டுகிறார். தேவர்களின் தவத்தைச் சுட்டிக் காட்டுகிறார். இந்திரசித்தின் தவம் சுயநலமாம்! தேவர்களின் தவம் பொதுநலமாம்! இராமனையும் இலட்சுமணனையும் கொல்வதற்காக இந்திரசித் தவம் செய்தானாம்—அது சுயநலமாம். இந்திரன் என்ற தேவன், கௌதமரின் மனைவியான அகலிகையைக் கள்ளத்தனமாகப் புணர வேண்டுமென்று தவங்கிடந்தது பொதுநலமாம்! சப்தரிஷிகளின் மனைவிமார்களைக் கற்பழிக்

த் தவங்கிடந்தானுமே அக்னி
தவன்—அவன் பொதுநலத்
வசியாம்! ஆனால், இந்திரசித்
ராம இலட்சுமணர்களைக் கொல்
த் தவங்கிடந்தது சுயநலமாம்!

இராமனையும் இலட்சுமணனையும்
ால்வதற்காகவே இந்திரசித் என்
வன் தவஞ் செய்தான் என்றே
வத்துக் கொள்வோம். அது எப்
ச் சுயநலமாகும்? தன் நாட்டின்
ு படையெடுத்துச் சென்றவர்
ா வெல்ல நினைப்பதோ அல்லது
ால்ல நினைப்பதோ எப்படிச் சுய
மாகும்? தன் நாட்டைக் காப்பது
நலமா? பொதுநலமா? நாடுகாடாக்
படுவதை, நாட்டுக்குடையவன்
ர்த்துக் கொண்டிருப்பதுதான்
ாது நலமா? தன் நாட்டின் மீது
டையெடுத்துப் போர் தொடுத்த
ாமஇலட்சுமணர்களை இந்திரசித்
ால்ல நினைத்ததைச் சுயநல
ன்று கூறுமளவுக்கு அறிவுச்
ிபமாக விளங்கும் ஆச்சாரியா
் போக்கைப் பார்க்கும்போது
ங்குப் பரிதாபமாகத்தான் இருக்
ிது. ஏனோ இந்த ஆசாமி இப்படி
ல்லாம் அகப்பட்டுக்கொண்டு
ிக்கிறார் என்றுகூட எண்ணத்
ான்றுகிறது.

*

இராமனுடைய மனைவி சீதையை
ாவணன் தூக்கிக்கொண்டுபோய்
ட்டான். அதாவது, தேவ
டைய மனைவியை அரக்கன் அடித்
க்கொண்டு போய்விட்டான். இன்
ம் விளக்கமாகச் சொல்லவேண்டு
ுனால், பொதுநலவாதியின் மனைவி
ச் சுயநலவாதி தூக்கிக்கொண்டு
ய்விட்டான். மேலும் தெளி
ன விளக்கத்தோடு சொல்ல
ண்டுமானால், கடவுளின் கைப்
் நாயகியைக் கபட சந்நியாசி
வன் வஞ்சித்துக் கொண்டு
ய்விட்டான். இது இராமா
ம் என்ற இதிகாசத்தில் காணப்
ம் உண்மை.

இராமாயணம் என்ற இதிகா
தை எழுதியவர் வால்மீகி என்
். வால்மீகி இராமாயணத்தை
ழுதியபோது மகாவிஷ்ணு இராம
வதாரத்தை எடுக்கவில்லை—இரா
ன் இலங்கையை ஆளவில்லை—
த நிலவெடிப்பிலிருந்து கிளம்ப
லை.

சம்பவம் நடப்பதற்கு முன்
ழுதப்பட்டது இராமாயணம். வால்மீகியின் கற்பனையில் எழுந்த காவியம் அது. வால்மீகி இராமாயணம் எழுதிப் பல காலம் கழிந்த பின்னர்தான் இராம இராவணப் போர் நடந்ததாக இராமாயண வரலாறே கூறுகிறது.

சம்பவம் நடந்தபின் வரலாறு எழுதுவதா? சம்பவம் நடப்பதற்கு முன் வரலாறு எழுதுவதா?

வடுவூர்த் துரைசாமியைப்போல், ஆரணி குப்புச்சாமியைப்போல், கோதைநாயகியைப்போல், வால்மீகியும் ஒரு நாவலை எழுதினார். அது பின்னர், கம்பராமாயணமாகி, பம்பராமாயணமாகிவிட்டது. தமிழ்நாட்டிலே கம்பராமாயணம் இருப்பது போல், ஆந்திரநாட்டிலே பம்பராமாயணம் என்று ஒரு இதிகாசம் இருக்கிறது. வால்மீகி இராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் இருக்கின்ற அளவு வேறுபாடு பம்பராமாயணத்துக்கும் வால்மீகி இராமாயணத்துக்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது. சீதையை இராவணன் தூக்கிக்கொண்டுபோன சம்பவம், வால்மீகியைத் தழுவியே பம்பரும் எழுதியிருக்கிறாராம். இராவணனுடைய தோளில் இருந்தபடியே சீதை, தன் இடுப்பில் அணிந்திருந்த அரைமூடியைக் கழற்றிக் கீழேபோட்ட சம்பவம், பம்பராமாயணத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறதாம்.

*

இராமாயணம் பொய்யோ மெய்யோ நாமறியோம். அதற்காக அதில் கூறப்படும் சம்பவங்களை ஆராயாமல் இருக்கமுடியுமா?

இராமன், தன்னுடைய மனைவி பறிபோனபின், அந்த அம்மையாரைத் தேடி அலைந்து திரிந்ததாகவும், பின்னர், இலங்கையில் இராவணன் பாதுகாப்பில் இருப்பதாகக் கேள்விப்பட்டு, வானரர்களை (திராவிடர்களை) துணைக்கழைத்துக் கொண்டுபோய் இராவணனோடு போர்தொடுத்து வெற்றிபெற்றுச் சீதையை மீட்டுக்கொண்டு வந்ததாகச் சொல்லப்படும் சம்பவம் இருக்கிறதே, அது சுயநலமா? பொதுநலமா? இராமன், தன்னுடைய மனைவியை மீட்கப் போரிட்டது பொதுநலமென்றால், இந்திரசித் தன்னுடைய தகப்பனை மீட்கப் போரிட்டதும் பொதுநலம் தானே!

*

காங்கிரஸ்காரர்களாகிய தேவர்கள் தண்டவாளத்தைப் பெயர்த்தது மட்டும் பொதுநலமாம்! திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய அரக்கர்கள் இரயிலை நிறுத்தியது சுயநலமாம்!

காங்கிரஸ்காரர்கள் சிறை சென்றது பொதுநலத்துக்காகவாம்! திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் சிறைசெல்வது சுயநலத்துக்காகவாம்.

காங்கிரஸ்காரர்கள் வெள்ளையனை விரட்டச் சிறை சென்றார்கள் என்றால், நாம் கொள்ளையர்களை விரட்டச் சிறை செல்கிறோம். இது எப்படிச் சுயநலமாகும்? வெள்ளையனை விரட்டியது பொதுநலமென்றால், கொள்ளையர்களை விரட்டுவதும் பொதுநலம்தானே! வெள்ளையர்கள் வெளியேறியதும் அந்த இடத்தில் கொள்ளையர்கள் குடியேறுவதற்கு அனுமதி அளிப்பதுதான் பொதுநலமா? எது பொதுநலம்? எது சுயநலம்?

வெள்ளையனை வெளியேற்றிய பொதுநலப் பிரியர்கள், இப்பொழுது எந்த 'நலத்தைப்' பின்பற்றுகிறார்கள்? வெள்ளையன், தன்னுடைய ஆட்சியின் வசதிக்காக ஒன்றாக்கப்பட்ட இந்த உபகண்டத்தை, வெள்ளையனிடமிருந்து மீட்ட இந்தப் பொதுநலப்பிரியர்கள், ஏன் அவரவர்கள் நாட்டை அவரவர்களிடம் ஒப்படைக்க மறுக்கிறார்கள்?

வெள்ளையனைத் தவிர வேறு யாராவது இந்த உபகண்டத்தை ஒன்றாக இணைத்து ஆண்டதுண்டா?

எந்தக் காரணத்துக்காக இந்த நாடு வெள்ளையனிடமிருந்து மீட்கப்பட்டதோ அந்தக் காரணத்தைக் காற்றில் பறக்கவிட்டு, "நாங்கள் யார் தெரியுமா? வெள்ளையனை விரட்டிய வீராதிவீரர்களாக்கும்!" என்று வாய்ச் சவடால் அடிப்பதுதான் பொதுநலமா? "அதோ வெள்ளையன் போய்விட்டான்—இதோ நான் அவனுடைய இடத்தில் உட்கார்ந்துகொண்டேன். இதற்காகத்தானே நான் அவனை விரட்டியடித்தேன்" என்று கூறுவதுதான் பொதுநலமா?

மேற்கத்தியான் போனன். அவனுக்குப் பதில் வடக்கத்தியான் வந்தான்—இதுதான் நாம் (திராவிடர்கள்) கண்ட 'சுதந்திரம்'!

சுதந்திரம்—இந்த அற்புதமான—விடுதலைச் சொல்லின் முதல் எழுத்தை எடுத்துவிட்டு, எஞ்சியிருக்கும் ஐந்தெழுத்துக்களாலுமன்றோ நம்மை ஆட்டிப்படைக்கிறார்கள் இந்தப் 'பொதுநலவாதிகள்'!

வெள்ளையன் இந்த உபகண்டத்தைப் பிடித்தபோதும் துப்பாக்கியைத் தொடவில்லை; இதை விட்டுப் போனபோதும் துப்பாக்கியைத் தொடவில்லை. மிகவும் தந்திரமாகத் தனது காரியத்தை முடித்துக்கொண்டு வெளியேறி விட்டான். "கருமமே கண்ணாயினர்" என்ற பழமொழிப்படி, எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து காட்டிவிட்டு, இருநூறு ஆண்டுகள் இப்பரந்த உபகண்டத்தை ஆண்டதற்கு ஏற்ற பரிசையும் பெற்றுக்கொண்டு போய் விட்டான்.

ஆனல், அவனிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பொதுநலப் பிரியர்கள் இருக்கிறார்களே, சுதந்திரம் என்ற சொல்லின் முதல் எழுத்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக் காட்டுவது போதாதென்று, ஆலகால விஷத்தைக் கூடச் சாப்பிட்டுச் சமாளிக்கக் கூடிய தைரியத்தைப் பொதுமக்கள் இவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று வேறு கூறுகிறார்கள்.

*

அறிவு—இது இப்பொழுது மக்களிடம் இருக்கிறது. முற்காலத்தில் இந்த அறிவு மக்களிடமில்லாமல் தனியாகவே ஒரு இடத்தில் இருந்து வந்தது. எங்கே தெரியுமா? கடலில்! எந்தக் கடலில்? பாற்கடலில்! பாற்கடல் என்றால்? அதுதான், பாற்கடல், தயிர்க்கடல், மோர்க்கடல், வெண்ணெய்க்கடல், நெய்க்கடல், சாம்பார்க்கடல், ரசக்கடல் என்று நமது புராணங்களிற் சொல்லப்படும் சப்த மகாசமுத்திரங்களில் ஒன்றான பாற்கடலில்தான் 'அறிவு' என்ற அழியாப் பொருள் இருந்தது. இது நான் கூறுவதல்ல; நமது மாகாணப் பொதுநலப் பிரியர் இருக்கிறாரே, அவர்தான், தேவர்களில் ஒருவர், நம்மை எல்லாம் அரக்கர்களாக்கி அகமகிழ்கிறாரே, நமது முதலமைச்சர், ஆச்சாரியாரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்தான் அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, அந்தக் காலத்தில், அறிவு, மக்களிடம் இருந்ததில்லை; சப்தமகா சமுத்திரங்களில் ஒன்றான பாற்கடலில் இருந்ததென்று குறிப்பிட்டார்.

சமுத்திரத்துக்கடியில் அமிழ்ந்து கிடந்த அந்த அறிவை வெளியே எடுக்க வேண்டுமென்ற எண்ணம் அந்தக் காலத்தில் இருந்தவர்களுக்கு உண்டாயிற்றாம். இந்தக் காலத்தைப்போலவே, அந்தக் காலத்திலும் தேவர்களும் அரக்கர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களில் யாருக்கு இந்த எண்ணம்முதலில் உண்டாயிற்று? யாருக்குஅதிக அறிவுப்பஞ்சம் இருந்தது? அதில்
யார் வெற்றி பெற்றார்கள்? என்பன
வற்றிற்குப் புராணத்தில் விளக்கம்
கூறப்பட்டபோதிலும், இந்த விஷ
யத்தைக் கூறிய ஆச்சாரியார் இவை
பற்றி ஒன்றுமே கூறவில்லை.

> "பழைய புராணத்தைப்பாரு
> கள். அமிர்தம் என்ற அறிவைக்
> கடைந்தெடுக்க முற்பட்டார்கள்,
> ஒரு பக்கம் அரக்கர்கள், ஒரு பக்
> கம் தேவர்கள் என்று இழுத்துக்
> கடைந்தார்கள்."

என்று மட்டுமே கூறியுள்ளார்.
இந்த அறிவைக் கடைந்தெடுப்பதற்
குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள்
எவை என்பதை ஆச்சாரியார் கூ
விட்டாலும், புராணத்தில் கூறப்பட்
டிருக்கிறது. மகாமேரு என்ற
மலையை மத்தாகவும், ஆதிசேஷன்
என்ற பாம்பைக் கயிறாகவும் பயன்
படுத்திப் பாற்கடலைக் கடைந்தார்
களாம். இந்த இரண்டு கருவிகளில்
மகாமேரு பர்வதத்தைத் தூக்கி
கொண்டுவந்து பாற்கடலில் வைத்த
வர்கள் யார்? ஆதிசேஷன் என்ற
பாம்பைப் பிடித்துவந்து, அந்தப்
பர்வதத்தைச்சுற்றிக்கயிறாகக் கட்டி
யவர்கள் யார் என்பதற்கு ஆச்சாரி
யாரும் விளக்கம் கூறவில்லை, புரா
ணத்திலும் புலன் கிடைக்கவில்லை
என்றபோதிலும் மகாமேரு என்ற
பர்வதம் மத்தாகவும், ஆதிசேஷன்
என்ற பாம்பு கயிறாகவும் பயன்
பட்டதாகப் புராணம் கூறுவதை
'அறிவுக் களஞ்சியமாம்' ஆச்சாரி
யாரும் ஆமோதித்துள்ளார்.
எனவே, இதில் யாருக்கும் சந்தே
கம் எழவேண்டியதில்லை. என்ற
போதிலும், மகாமேரு ஒரு மலையா
யிற்றே! அதை எப்படிப் பெயர்
தெடுக்கமுடிந்தது? ஒரு வேளை
அந்த மலையைப் பெயர்த்தெடுக்கக்
கூடிய பெரிய பெரிய கடப்பாரை
களை, அக்காலத்து ஆரம்பக் கல்வி
திட்டத்தின் உதவியினால் பயிற்சி
பெற்ற கொல்லன் ஒருவன் தயாரி
துக்கொடுத்திருப்பான் என்றுவை
துக் கொண்டபோதிலும், பெயர்
தெடுத்துக் கொண்டுவரப்பட்ட அ
தப் பர்வதம், திரும்பவும் அந்த
இடத்தில் கொண்டுபோய்ச் சேர்
கப்பட்டதா அல்லது அந்தப் பாற்
கடலிலேயே விட்டு விட்டார்கள்
என்பதற்கும் விளக்கம் ஆச்சாரி
யாரும் தரவில்லை—புராணமும் கூ

(13-ம் பக்கம் பார்க்க)

வைதிகம் கலைந்தவிதம்!

மடங்களுக்குப் போக வேண்டிய சமயம் வரும்போது எப்படியாவது தப்பித்துக் கொண்டிருக்கிறேன் நான். அம்மாதிரி ஒரு இடத்திற்குப் போனல் அந்த ஸ்தானத்திற்கேற்ப நடக்கவேண்டும். எனக்கு அளிக்கப்பட்ட பயிற்சியோ அதற்குத் தகுந்தவாறு இல்லை. என் தோற்றம், மனதிற்கு வெறுப்புண்டாக்கும் தோற்றம். ஆகவே, மடங்களுக்குப் போக எனக்குக் கூச்சம் ஏற்படுகிறது ; நான் வைதிக குடும்பத்தில் பிறந்தவன்தான். ஆனல், இந்தக் காலத்திற்கேற்ப எனக்குப் பெரியவர்கள் பயிற்சி அளித்து விட்டார்கள். அதனல் வைதிக முறை தவறிப் போய்விட்டது. தவறிப் போன முறையைப் புதிதாக ஆரம்பித்தால் அது வேஷம் என்று வேறு சொல்வார்கள். ஆகவே என்பாட்டுக்கு வாழ்க்கையை நடத்திப் போகிறவன் நான்.

—ஆச்சாரியார்,
29—9—53

"பக்தி விலாஸ்"

ஞ்சியில் பேசிய அன்பர் ஆச்
யார், காங்கிரஸ் தோழர்களுக்கு
வுரையொன்று வழங்கினார் —
ர்காள்! தடியும் கத்தியும் தூக்
கொண்டு, எதிர்க்கட்சியினரை,
யானபடி' பார்க்க வேண்டு
ன்று கிளம்பாதீர்கள். அது,
ு. ஆண்டவனைத் துதியுங்கள்.
ன், எதிர்க்கட்சிகளுக்கு நல்ல
தியைக் கொடுப்பான்', என்ப
, இந்த அறிவுரையை, அவர்,
பல இடங்களில், வழங்கி வருவ
, தேசிய ஏடுகளும் தெரிவித்த
உள்ளன! இந்த அறிவுரையைக்
ட்ட நான் அகமகிழ்ந்தேன்.
ட்டுவித்தால் யாரொருவர்
ாதாரே!", என்ற தமிழ்மொழிப்
அனைவருக்கும் போதனை புரி
ர்,—புரியவில்லையோ, காங்கிரஸ்காரர்
ல் 'ஜே!' போடும் பெருமை
ற்றவர்—அவரது போதனையைச்
மேற் கொண்டு, சிஷ்ய கோடிகள்
ம் தனிவர்-குணம் பெறுவர்—
தியும் கட்டாரியும் ஏந்தி தடியும்
ும் எடுத்து நம்மைத் தாக்கு
்குப்பதில், கையிலே ஜாலரா
, நெற்றியில் நீறோ — வெண்
ணே இட்டு, 'கிரிதரகோபாலா!
மு. க. மனதை மாற்றிடு
பாலா!!' என்று, வீட்டுக்குள்ளி
தபடி, பஜனை செய்வர், என
ணினேன்! ஆனால், கடந்த
ம், மதுரையிலிருந்தும்,
தாப்பேட்டையிலிருந்தும் வந்த
ந்திகளும், திருத்தணியில் நடை
ற சம்பவமும், இன்னும் பல
்களிருந்து வரும் நிகழ்ச்சிகளை
பார்க்கும் போது, விந்தையாக
்க்கிறது, எனக்கு.

'ஈசனைப் பூஜி மனமே!'—'ஈசன் —துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்பவன்!'–'அவனன்றி ஓரணுவும் அசையாது!'— இது போன்ற, ஆண்டவன் பெருமைப் பற்றிக் கூறும் 'அகராதி'யினை அறிவோம், நாம். இதனையே, அன்பர் ஆச்சாரியாரும் எடுத்தோதினார்! தான் செய்யும் காரியங்களுக்கும் ஆண்டவனின் திருவருளே காரணமெனவும் செப்புகிறார்! ஆண்டவன் மீது, சண்டைக்கு செல்ல விரும்பவில்லை நாம். பாபம்! தலையிலே தேனைத் தடவி, பாலைக் கொட்டி, படாத பாடுபடுத்தும் பக்தர்களிடம் அகப்பட்டு விழிக்கும் 'எல்லாம் வல்ல' அவரினை, எதிர்த்து நிற்பவர்களுமல்ல, நாம். ஆனால், ஆச்சாரியார், எந்தக் கூட்டத்துக்கு இதோபதேசம் செய்கிறாரோ, அதே கூட்டம், "ஆண்டவன் மீது பாரத்தைப் போடாமல்,", அரிவாளும் கம்பும் தூக்கி, நமது தோழர்களின், கண்ணையும் காலையும் பறிக்கும், காட்டுமிராண்டித் தனத்தைக் கையாள்வதைக் காணும் போது, விந்தையாயிருக்கிறது, நமக்கு. ஆச்சாரியாரை 'வருக, மாதேவா!' என வாழ்த்துகிறார்கள்—"நாஸ்திகத்தை அழிக்க வந்த நல்லவா, போற்றி!" என்று புகழ்கிறார்கள் — நாடெங்குமுள்ள தம்பிரான்கள், ஜடாமுடிகள், சங்கராச்சாரி சீடர்கள் அனைவரும் 'பூரணகும்பம்' ஏந்தி வரவேற்கிறார்கள்—விநாயகர் பூஜை நடாத்த நிதிதிரட்டி, அப்பமொடு அவல் பொரி மட்டுமின்றி, இன்னிசையும் எழில் நடனமும் வைத்துக் கொண்டாடுகிறார்கள். இத்தகைய சீடக்கூட்டம், அவர் பக்கம், நிற்கிறது! அவரும், இந்த சீடகோடிகளுக்குத்தான், திருவாய் மலர்ந்தார்—"சீடர்காள்! தி. மு. கவினடம் கத்தியேந்தி செல்லாதீர்கள். அவர்கள் மனம் பக்குவப்பட வேண்டுமென்று ஈசனைப் பஜியுங்கள்" என்பதாக. பக்தர்களோ, தாளச்சப்தம் எழுப்பவில்லை! தவளைச் சப்தம் போடுகிறார்கள்!! வேதமுழக்கம் செய்யவில்லை—'விட்டேனா, பார்!' என்கிறார்கள்!! நீறுபூசி, நெஞ்சிலே பதம்பாடி, 'இறைவா! என்னப்பா!' என்று கூறவில்லை — "எங்கே கம்பு — இந்தா பணம்! வீசு" என்று, கூச்சல் போடுகிறார்கள். மதுரையில் தி. மு. க. தோழர்களைத் தாக்கியதையும், சைதாப்பேட்டை 'காலித்தனமும்', திருத்தணி 'வெறியாட்டமும்' செப்புகின்றன, இதனை. என்னவென்று சொல்வது! ஆச்சாரியார், அவர் தம், குருநாதர். குருநாதர், ஆண்டவன் மீது பாரத்தைப் போடச் சொல்கிறார்—சீடர்களோ, 'தடியும் கத்தியுமே எமது தாரக மந்திரம்' என்கின்றனர். இதற்குக் காரணம், என்ன? குருநாதர் கூறுவதில், சிஷ்யகோடிகளுக்கு, நம்பிக்கையில்லததாலா!! அல்லது, ஆண்டவனின் "சக்தி"மீது, அவர்கட்கே அவநம்பிக்கை வந்து விட்டதாலா!!

*

காங்கிரஸ் பக்தகோடிகளின் நிலை இவ்வாறிருக்க, மடத்தம்பிரான்களின் போக்கு, விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. சின்னாட்களுக்குமுன், குன்றக்குடி அடிகளார் என்பார், திருச்சியில் செப்பினராம், தெய்வ மகிமைப்பற்றி! ஆத்மார்த்திகர்களே ஆண்டவன் எல்லோருக்கும் மேலானவன். இதனை, அறியவில்லை, பலர். அத

கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
ஏ. எஸ். ராஜன் அண்ட் கம்பெனி,
தபால்பெட்டி நெ. 155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

னுலேயே கோயில்களுக்கு மந்திரிமார்கள் வந்தால், குருக்கள்மார் கோணங்கிக் கூத்தாடுகின்றனர். கோயில் முறைகளை அனுசரிக்காமல் விசேஷ மரியாதை காட்டுகின்றனர். விவேகமோ, இது? ஆண்டவன் சன்னதியில் அனைவரும் சமம்! இதனை அறிவிக்கிறேன், நான்," எனும் கருத்தில் இந்த அடிகள் ஏற, காரும், படிக்க ஆங்கில நூல்களும், எழுத, 'டைபரைட்டும்' கொண்டு நவ நாகரீக முறையில் உலவும் வாலிபரெனக் கேள்விப் பட்டதுண்டு, நான். இளமைத் துடிப்பு, இம்மியும் குன்றாத காரணத்தால், "கோயில் குருக்களோடு நானே! கொண்டாட்டமாயிருக்கப் போறேனே!!" என்று பாடிடாமல், "அமைச்சனாயிருந்தாலென்ன? அரசனாயிருந்தாலென்ன? அனைவரும், மதகுருவுக்குக் கட்டுப்படுவார்களே! குருக்களைவிட, கோலேந்தியவன் உயர்ந்தவனல்ல!" என்று, வீராவேசமாகப் பேசியிருக்கிறது. "ஆண்டவன் அடியார்கள், அரசாங்க அதிபதிகளைவிட மேலானவர்கள்," என்கிற, உரிமையை வலியுறுத்தியிருக்கிறது. இந்த உரிமை முழக்கம் கேட்ட பலர், ஆமாம்! அடிகள் கூறுவது உண்மைதானே!! என்றுகூறவும்கேட்டேன். 'ஆண்டவனைத் துதித்து அவனடி பெறப் பாடுபடும், அடிமையாளர்களுக்கு, அமைச்சனாயிருந்தாலென்ன! ஆண்டியாயிருந்தாலென்ன!! அனைவரும், மானிட ஜாதிதானே?— குன்றக்குடி இவ்வண்ணம் உரிமை முழக்கம் எழுப்பியது! இந்த முழக்கம் கேட்ட என் காதில், பழம் பக்தர்கள், அதனைப்பாராட்டிப் புகழ்ந்த,சிலசெய்திகளும்,வீழ்ந்தது குன்றக்குடியின் துணிவைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன்! சிந்தனை, முடிவதற்குள், குன்றக்குடியைக் கொட்டும்செந்தேள் போல், செய்தியொன்று வந்துள்ளது. கடந்த 28ந் தேதியன்று, அரசாளும் ஆச்சாரியாருக்கு, 'தர்மபுரம்' ஆதினச்சீடர்கள், தண்டனிட்டனராம்.

அழகான பேழையில்!
செந்தமிழ்ச் சொட்ட!
அச்சடித்து பொருத்தப்பட்ட

வரவேற்பிதழ், வாசித்தளிக்கப்பட்டதாம். 'ஏழிசைமன்னர்' 'இன்னிசைவாணி' என்றெல்லாம் பட்டம் வழங்க. பாகவதர்களை அழைத்துச் சென்று, அடிக்கடி தன்னுடைய ஆதின மாளிகையில் மடாதிபதி, 'பட்டம் சூட்டும்'' என்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதுபோல, ஆச்சாரியாரை தர்மபுரம் வருமாறு தாக்கீது பிறப்பிக்கவில்லை! "அத்யந்த பக்தா! ஆண்டவன்மீது உமக்குள்ள பக்திகான சந்நிதானம் சந்தோஷ சாகரத்தில் மிதக்கிறோம். வருக! வந்து பிரசாதமும் பெறற்கரிய சீரும் பெற்றுச் செல்க!" என்று 'திருவோலை' விடுக்கவில்லை. திவ்வியமான பந்தலில், அழகான பேழையில், அழகான எழுத்துக்களில், "உற்ற காலத்து உறுதுணையான பெருந்தலைவ!" என்று வர்ணித்து, வரவேற்பு, வாசித்தளிக்கப்பட்டிருக்கிறது. எங்கே? சென்னையில்! 'தர்மபரம்' 'தியாகராய நகருக்கு' வந்து, வழங்கியிருக்கிறது, இந்த வரவேற்பை!!

குன்றக்குடி, அவ்விதம்.
தர்மபுரம், இவ்விதம்.

*

காளைவரீர்! கடமைப் பணிபுரிய வரீர்!!

கல்லக்குடி அறப்போர் நிதிக்காக

3-10-53 சனி—4-10-53 ஞாயிறுகளில்
இரவு 10-மணிக்கு

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
தரும்

இடிந்த கோயில்

இலட்சிய நாடகம்

மூலக்கதை: விஸ்வம், வசனம்: ரவீந்திரன்,
பாடல்கள்: லட்சுமணதாஸ், & முத்துக்கூத்தன்.

எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். ஜி. சக்கரபாணி,
என். எஸ். நாராயணபிள்ளை, கே. ஏ. தங்கவேல்,
எம். கே. முஸ்தப்பா, முத்துக்கூத்தன், ஏ. என். மணி,
எஸ். எம். திருப்பதிசாமி, குண்டுமணி, சேதுபதி,
ஏ. ரத்னமாலா, ராஜேஸ்வரி, டி. எஸ். மரகதம்,
சுலோசனா மற்றும் பலர்.

நடனம்: தனம், & சுசீலா
இசையமைப்பு: என். எஸ். பாலகிருஷ்ணன்
நடன அமைப்பு: ஆர். டி. ராதாகிருஷ்ணமூர்த்தி
பின்னணி: சந்திரன், & கஸ்தூரி.

இலட்சிய காணிக்கை செலுத்த
எல்லோரும் வாரீர்!
திருச்சி-தேவர் மன்றத்தில்!

எல்லாம் வல்லவர்!
எங்கும் நிறைந்தவர்!
அண்ட சராசரமும் அவ
னடியில்!
அவனன்றி அசையாது எதுவும்!

இவ்வண்ணம், ஆச்சாரியார் கூறு கிறார். அவர் புதிதாகக் கண்டு பிடித்த விசேஷ ஆராய்ச்சியன்று இது. வேதாந்தங்களும், வியாக்யான டர்களும், ஆண்டாண்டு காலமாக இதனைக் கூறிவருகின்றன.

இந்த 'அரிச்சுவடி' தெரியாதோர், ஆதீனத்துக்குள் நுழைய அருகதை பெறார். காதில் ஆடும் குண்டலமும், மார்பில் ஊசலாடும் மரகதமணியும், தாம்பாளமும், பெறற்கரிய பிரசா தங்களும் 'ஆண்டவன் அளித்த ப்பிரசாதங்கள்' என்று வர்ணிக் த, மடபீடம் கிடையாது. ஒவ் வாருவர் உள்ளத்துள்ளும் ஜோதி ாக இருந்து, "ஆடுபவனும் நானே வர்களை ஆட்டுவிப்பவனும் னே" என்று கிருஷ்ணபரமாத்மா சப்பினர், கீதையில்! எனச் சிந்து டுவோர், ஏராளம். எனினும், கில உலகும் காக்கும் ஐயனை றந்துவிட்டு, ஆச்சாரியாரின் சீட காடிகள், தடியையும் கத்தியை ம் தூக்குகின்றனர் — அதைவிடப் பரியதோர் ஆச்சரியம்! "ஆண்ட ன்மீது பாரத்தைப் போடுங்கள்" ன்று எந்த ஆச்சாரியார், காஞ்சி ல், சொன்னாரோ அதே ஆச்சாரி ர், சென்னையில் வந்ததும், சிஷ்ய காடிகளைவிட மோசமாகி இருக் றார். காஞ்சியில் அன்புபதேசம்! சென்னையில் அதற்கோர் எதிர் று! "தி. மு. க. மனதைமாற்று !"என்று ஆண்டவனைத் துதிக்கு று, அங்கே இதோபதேசம் செய் வர் இங்கே வந்ததும், நினைக்கக் சும், நிந்தை மொழிகளால் நம்மை ர்ப்பணித்திருக்கிறார்! "அரகர தேவா! கோவிந்தநாம சங்கீர்த் னம்" கொஞ்சம் இவர்கள் புத் யை மாற்று!", என்று வீட்டுக் டத்தில் உட்கார்ந்தபடி, பகவா த் துதிக்கவில்லை. வெள்ளையன் ண்டுபிடித்த அழகான ஒலி ருக்கி முன்னின்று, நாகல் நடை ல், நம்மைக் குறித்து—'வெறுத்து ங்கினர்' என்று தேசிய ஏடுகள் ருமைப்படக்கூடிய அளவில் — சியிருக்கிறார், வண்ணாரப் பட்டை, திருவொற்றியூர் ஆகிய இடங்களில். இவர்தான், 'ஆண்ட வனை'க் காட்டியவர்! இவரேதான், அதனை மறந்து, நம்மீது பாய்பவர்!! இதற்கென்ன காரணம்? ஆண்ட வன் மீது காஞ்சியில் வைத்த நம் பிக்கை, சென்னை வருவதற்குள் அழிந்து போய்விட்டதா? அல்லது, 'ஆண்டவனை நம்புவதில் பிரயோ சனமில்லை' என்று, இவருடைய சீடகோடிகள், எண்ணுவதைப் போல, இவரும் எண்ணுகிறாரா? 'ஆம்', எனில், இந்தக் கூட்டம், ஆண்டவன் பெயரை, இழுப்பது, தமது அக்கிரமத்தைத் திரையிட்டு மூடவா?

*

ஆச்சாரியாரின் 'சக்திநிலை,' இருக்கிறது, இவ்விதம். "அவரை விடமேலானவர்கள் மடாதிபதி கள்" என்று கூறப்படும் தம்பிரான், 'பக்தியோ' இத்தகையவருக்கு அழ கான பேழை வாங்கி—அச்சுத் தமிழ்ப் பொறித்து—'உற்றகாலத்து உற்ற துணையான பெருந்தலைவர்!' என்று வர்ணித்து—தண்டனிடும் நிலையிலிருக்கிறது. இத்தகைய வர்கள் ஒன்றுசேர்ந்து, "பக்தி விலாஸ்" எனும் பெரியதோர் மாளிகையினைத் தோற்றுவித்திருக் கிறார்களாம், சென்னைத் தியகராய நகர், உஸ்மான் ரோட்டில். இத் திருப்பணியிலீடுபட்டிருப்பது, தருமபுரஆதீன மடாலய, தேவாலய சமயப்பிரசார இலாகாவாம். சிந்தையை சிவபிரானுக்கு அர்ப்ப ணித்துவிட்ட இந்த ஆன்ம கோடி கள், "பக்திவிலாஸ்" கட்டியிருக் கிறார்கள். எதற்குத் தெரியுமா? பக்தியை வளர்க்க! கூறுகிறார், ஒருவர். "அறிஞர்தம் கூட்டுறவும் பிரசார வன்மையும்" இருந்தால் தான், பக்திமார்க்கம், வளரமாம் — அதற்குத்தான் பக்தி விலாச மாம்! "ஆண்டவன் அருள்"- அல்ல அறிஞர் தம் கூட்டுறவு! "எம்பிரான் செயல்" அல்ல!—பிரச்சாரவன்மை! தெரிவிக்கிறார் ஒரு பக்தகோடி இவ்வண்ணம். நீக்கமற நிறைந்து நிற்கும் "ஈசனுக்குப், புகழ்தேடப் போகிறார்களாம். இவர்களே சொல்லுகிறார்கள், எல்லாம் அவன் செயல் என்று. அதே நேரத்தில், "அவனைக் காப்பாற்ற பிரச்சார வன்மையும் அறிஞர்தம் கூட்டுறவும் தேவை," என்கிறார்கள். எவ்வளவு விசித்திரம்! எத்தகைய ஆசாமிகள் இவர்கள்!! எத்தர்களா? பக்தர்களா? —எண்ணிப்பாருங்கள் நீவிர்.

★

எது உண்மை?

"விலங்கு நிலையிலிருந்து, காலப் போக்கில் பரிணமித்துச் சிறந்த மனிதன், தன் முன்னோர்களைவிட அறிவிலும், ஆற்றலிலும் வளர்ச்சி யடைந்திருக்கிறான், இன்னும் வளர்ச்சியடைந்து வருகிறான்" என்று கூறுகிறது விஞ்ஞானம்.

"ஆதியில் தேவர்களாயிருந்து நாளடைவில் அறிவிலும், ஆற்றலி லும் குறைந்து, தற்போது மனித நிலைக்கு வந்திருக்கும் மனிதர், இன் னும் கீழான நிலைக்குப் போய்க் கொண்டிருகின்றனர்" என்று கூறு கிறது புராணஞானம்.

*

"நூறு ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் துக்கம், அநீதி, நோய் முத லிய கொடுமைகளிலிருந்தும் பெரும் பகுதி விடுதலை பெற்று, எல்லோருக் கும் மகிழ்ச்சியூட்டும் இன்பபுரியாக இலங்கக்கூடும்" என்று விஞ்ஞானி கள் கூறுகின்றனர்.

"இனி வருங்காலத்தில் அதாவது கலி முற்ற முற்றக் காலம் மிகவும் கெட்டு, உலகில் பசியும், பஞ்சமும், நோயும், கொள்ளையும் அதி கரித்து, மனிதனை மனிதன் அழிக்க இந்த யுகம் முடிவெய்தும்" என்று சாற்றுகின்றனர் புராணஞானிகள்.

*

"விஞ்ஞானம் கற்பிக்கும் நாகரீ கப் பாதையே முன்னேற்றத்திற் கான நல்லவழி. அப்பாதையில் சென்று நமது துக்கத்தையும் குறை களையும் போக்கிக்கொள்வோம்" என்று கூறுகிறார்கள் சுயமரியாதைக் காரர்கள்.

"நமது புராண இதிகாசங்கள் காட்டியுள்ள பாதையிற் சென்று, ஆதிகால நிலைமையை மீண்டும் அடைவதே இன்பம்" என்று வாதிக்கின்றனர் புராண மரியாதைக் காரர்கள்.

பகுத்தறிவுகொண்டுசிந்தியுங்கள்!

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 4—10—53 [ஞாயிறு

நல் வாழ்த்து

★

"ஆந்திரம்" அரும்பிவிட்டது. அக்டோபர் முதல் தேதி முதல், ஆந்திர மக்கள், தமக்கென ஓர், எல்லையைக் குறித்துக்கொண்டுவிட்டார்கள்.

'சென்னை மாகாணம்' என்று, பெருமையோடு கூறிவந்த பாகம், துண்டாடப்பட்டு, இரண்டு மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

'துண்டாடப்பட்டு' என்றால், கத்திரிக்கோல் ஏந்தி, வெட்டியல்ல — நாற்பதாண்டுகளாக முழக்கமிட்டு, பலரைப் பலி கொடுத்து வீராவேசமாக நின்று, வெற்றி பெற்றுவிட்டனர், ஆந்திர மக்கள்.

ஒரே கோடிட்டுக் காட்டப்பட்ட சென்னை மாகாணம், இரண்டு எல்லைக்கோடுகளுக்கு ஆட்பட்டதாக, ஆகிவிட்டது. வெள்ளையன், சிருஷ்டித்தது—இன்று, மாறுகிறது. இரு மாகாணங்கள்! இந்த நாளில், நாம், பூரிப்படைகிறோம்.

புது எல்லை கண்ட, ஆந்திர சகோதரர்களை, அன்போடு வாழ்த்துகிறோம்.

அவர்களது தியாகத்துக்கும், அயராத முயற்சிக்கும், தி. மு. க. தன்னுடைய பாராட்டுதல்களை, தெரிவித்திருக்கிறது.

பூக்கும் புதுராஜ்யத்தை டில்லியின் முதலமைச்சர், பண்டித நேரு ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

அவர்தான், ஆந்திர அமைப்பை, ஆரம்ப முதல் எதிர்த்தவர்!

ஆந்திரருக்குத் தனி மாகாணம் என்று ஆயிரக்கணக்கில் வாலிபர்கள் கூக்குரலிட்டபோது அவர் செவிசாய்த்தாரில்லை.

சீதாராம் "ஆந்திரராஜ்யம் அடையும் வரை பட்டினி கிடப்பேன்!" என்ற போதும் அவர் மனம் இளகவில்லை.

பொட்டி சீராமுலு "என் உயிரையே காணிக்கையாகத் தருகிறேன்!" என்று வீரச்சாவை மலர்ந்த முகத்தோடு ஏந்திய போதும் பண்டிதரின் கரம் அசையவில்லை.

ஆனால் நாற்பதாண்டுகளாக மக்கள் உள்ளத்திலிருந்து கிளம்பிய இந்த மூச்சின் வேகம் ஆசிய ஜோதியின் பிடிவாதத்தையும் உடைத்தெறிந்தது.

இன்று அதே நேருவைக் கொண்டு தங்கள் ராஜ்யத்தை ஆரம்பித்துக் கொண்டு விட்டனர், ஆந்திரர்கள்.

*

சென்ற நூற்றாண்டில்—இந்தியத் துணை கண்டம் ஆங்கிலேயரின் ஆளுகைக்குள் வந்தவுடன், தங்களுக்குச் சௌகரியப்பட்ட வகையில் மாகாணங்களை அமைத்துக் கொண்டனர், வெள்ளையர்கள். அரசாங்க மொழியாக ஆங்கிலம் வைக்கப்பட்டு விட்டதால் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் ஒரே மாகாணத்தில் இருந்த போதிலும், அரசாங்கக் காரியங்கள் செவ்வனே நடந்து சென்றன.

இருந்த போதிலும் இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலே சுடர்விட்டெரிய ஆரம்பித்த விடுதலை ஒளி, தாய்மொழிக்கு ஏற்பட்ட சீர்கேட்டை எடுத்துக்காட்டிற்று.

மொழிவழி மாகாணம் அமைய வேண்டும் என்றனர், மக்கள் தேவையை உணர்ந்து மக்களுக்காக ஆட்சி புரிய வேண்டும் என எண்ணிய சிலர்.

நாட்கள் ஆக ஆக, சிலர், பலராயினர்.

மொழிவழி மாகாண இயக்
தின் நேர்மையையும், வளர்ச்சி
யும் உணர்ந்த வெள்ளை அரசாங்
1935-லேயே சென்னை மாகாண
தோடு ஒட்டிவைக்கப்பட்டிரு
ஒரிய மொழி பேசப்படும் பகு
களை, புதியதாக ஆரம்பிக்கப்ப
ஒரிசா மாகாணத்தோடு சேர்த்

இதுதான் இந்திய உபகண்
தில் தாறுமாறாக அமைந்து இ
கும் மாகாண எல்லைக் கோடு
மாற்றும் சரித்திரத்தின் மு
அத்தியாயம்.

ஆனால் இதைத் தொடர்
ஆந்திர ராஜ்யம் அமைக்கவி
ஆங்கிலேயர். 1907-லிருந்து
திரர் கிளர்ச்சி செய்து கொண்
இருந்தனர்.

காங்கிரஸ் அவர்களுடைய வா
தை ஒத்துக்கொண்டது. 1928
யே பண்டித மோதிலால் த
யில் ஒரு குழுவை நிறுவி மெ
வழி மாகாணம் அமைவ
ஆதரிப்பதெனத் தீர்மானித்தது

வெள்ளை அரசாங்கம் செய்
தவறியதை, நம்முடைய சுயரா
சர்க்கார் செய்யுமென்று, நம்பிக்
யோடு விடுதலைப் போராட்
திலே ஈடுபட்டனர் ஆந்திரர்.

சுதந்திரம் பூத்தது! ஆனால்
திரர் நம்பிக்கை சிதறடி
பட்டது.

மக்களின் விருப்பங்களைப் பூ
செய்யப்போவதாகக் கூறி
போன தேசியத் தலைவர்கள்,
திரர்கள் தங்களுடைய வ
காலத்திற்குத் தளராத நம்பி
வைத்திருந்த தனி மாகாண
பிரித்துக்கொடுக்க மறந்தன
மறுத்தனர்.

ஆங்கிலேயன், எப்படி, எப்
யெல்லாம் நாட்டைத் துண்
ஒருவருக்கொருவர் தூண்டிவி
பிரித்தாளும் கொள்கையின்
நாட்டை ஆண்டானோ, அப்ப
தேசியத் தோழர்களும் ஆரம்பி
விட்டனர்.

அவர்கள் நினைத்திரு
1947-ல் புதிய அரசியலமைப்
உருவாக்கியபோதே ஆந்திர
யத்தை உருவாக்கி இருக்கல
கொஞ்சம் கூடச் சிரமமின்றி

ஆனால் அப்படிப்பட்ட ஜன
வழிகளை அவர்கள் விரும்பவி

"இந்தியா—ஒரே தேசம்! ஒரே இனம்!! அதை ஆள, அதன் மாற்றங்களை முடிவு செய்ய நாமே உரிமையுடையவர்!!!" என்ற ஏதேச்சாதிகாரப் பாதையில் சென்றனர்.

தங்களுக்கென்று தனி மாகாணம் கேட்ட ஆந்திரர்களுக்கு தக்க பதிலைத் தராமல் வீண் வாதங்களைக் கிளப்பியது மத்திய அரசாங்கம்.

இந்தத் தேசியத் தலைவர்களின் பித்தலாட்டத்தால் ஒரு சில ஆந்திரத் தலைவர்களுக்குத் தமிழர்மீது கூடக் கோபம் ஏற்பட்டது.

இதை வளர விட்டது, பிரிட்டிஷ் ஆட்சிமுறையைப் பின்பற்றும், நேரு அரசாங்கம்.

நேரு சர்க்கார் காலந் தாழ்த்தாமல் இருந்திருந்தால் 'மதராஸ் மனதே!' என்ற கூச்சலும், அதை எதிர்த்துச் சில அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களும் நடந்திருக்காது.

என்னவோ! நடந்ததையெல்லாம் மறந்துவிடுவோம் ஆந்திரர்களுக்கு தமிழர்மேல் ஏற்பட்ட கோபமும் தமிழர்களுக்கு ஆந்திரர்கள்மேல் ஏற்பட்ட மன வேறுபாடும், நடுவில் நம்மெல்லோருக்கும் மேல் உட்கார்ந்துகொண்டு ஆட்டிப் படைக்கும் புதிய அரசாங்கத்தால் ஏற்பட்டது. இன்றைக்குஅந்தபண்டித நேருவே நல்ல பிள்ளையாகநின்று ஆசிகூறிஆந்திரத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

இனிமேல்தான் ஆந்திரர்களுக்கு சில அரிய உண்மைகள் தெரியப் போகின்றன.

"இன்று மறந்துபோயுள்ள அந்த மகத்தானசாம்ராஜ்யம் பல்கலைகளில் மேலோங்கி இருந்தது, துங்கபத்திரா, கிருஷ்ணா, கோதாவரி நதிதீரங்களிலிருந்து இந்த இனம் நாகரீகத்தில் உயர்ந்த வாழ்க்கையை அநுபவித்துக்கொண்டிருந்தது. விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு ஆண்டுதோறும் செல்வத்தை வாரிக் குவித்தனர். இவர்களுடைய கலாச்சாரத்தின் சின்னமாக அழகுக்கோயிலாக ஹம்பிநகர் எழும்பியது, அதிலிருந்த அரசபரம்பரை நேர்மையையும் நீதியையும் தவறாது கடைப்பிடித்து ஆண்டு வந்தது. ஆனால், அந்த உன்னத சாம்ராஜ்யம் இன்று மறைந்துவிட்டது!"

ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் அழிந்துபோன விஜய நகர சாம்ராஜ்யத்தைப்பற்றி வரலாற்று ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்.

அந்த மறந்த சாம்ராஜ்யத்தை ஞாபகத்திற்குக்கொண்டுவந்து, மறுபடியும் ஹம்பி நகரம் பரப்பிய நாகரீகத்திற்கு மக்களை அழைத்துச் செல்ல இன்று ஆரம்பித்திருக்கின்றனர், ஆந்திரத் தலைவர்கள்.

இந்த அரிய பணியில் அவர்கள் ஈடுபடும்போது அவர்கள் தெரிந்துகொள்ளப்போகும் உண்மையைத்தான் நாம் கவனித்துக்கொள்ள வேண்டியது.

ஆந்திரர்கள் தனி மாகாணமடைந்து, முன்னேறுவதை நாம் எந்தக்காலத்திலும் எதிர்த்ததில்லை. பிரிந்து வாழ நினைப்போரை கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ள நினைப்பது நம் அடிப்படைக் கொள்கைக்கே விரோதமானது!

இருந்தும் தேசியத் தோழர்கள் செய்த அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்களால், தமிழரை விட்டுப்பிரிந்தால் தங்கள் குறைகள் சீக்கிரம் தீர்ந்துவிடும் என்றநம்பிக்கையில் ஆந்திரர் தனிக்குடித்தனம் ஆரம்பித்திருக்கின்றனர்.

இனிமேல்தான் அவர்கள் தெரிந்துகொள்வர், தங்கள் நாட்டிலே ஏற்பட்ட துயரங்களுக்குக் காரணம், சென்னை அரசாங்கமல்லவென்று! ஆந்திர நாட்டிலே ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணம் மத்திய அரசாங்கமே ஒழிய சென்னை அல்லவென்பதை உணர்வர்.

ஆந்திர நாட்டிலே ஆலைகள் இல்லாமலிருப்பதற்குக் காரணம், கோயமுத்தூரல்ல, அகமதாபாத் என்பதையும், ஆந்திரரின் நலத்திலே அக்கறை கொண்டவர்கள் திருச்சியிலே இருப்பவர்களேஒழிய டெல்லியிலிருப்பவர்களல்ல என்பதையும் புரிந்துகொள்வர்.

வருகிற ஒருசில ஆண்டுகளில் ஆந்திரர்களின் கண்முன் அவர்களை பஞ்சையாக்கிய வடநாட்டு முதலாளித்துவம் தெரியும்.

தனியே இருந்துபார்த்தால்தான் அந்த உண்மை அவர்களுக்குப் புலப்படும்.

ஆந்திர சகோதரர்கள் அந்த உண்மையை உணரும் நன்னாளுக்கு முரசு கொட்டியவண்ணம் அவர்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்து உப-தலைவர் ராதாகிருஷ்ணன் கூறியிருப்பதையும் இந்த நேரத்திலே கவனப்படுத்துகிறோம்.

"திராவிடக்குழு மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவைகளைப் பேசும் தென்னிந்திய மக்கள் பல நூற்றாண்டுகள் ஒன்று சேர்ந்தே வாழ்ந்திருக்கின்றனர். கலாச்சாரத்தில் ஒன்றுபட்ட அவர்கள் இன்று பிரிந்து போகின்றனர்......................"

என்று கூறிக்கொண்டே செல்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன், தன் ஆசிச் செய்தியில். இதைத்தான் சீக்கிரத்தில் ஆந்திரர் உணர்வர். ஆந்திரத் தோழர்களைப்பற்றி எண்ணும்போது நம்மனதிலும் திராவிட சாம்ராஜ்யம் வாழ்ந்து அழிந்ததுதான் நினைவிற்கு வருகிறது—வருத்தம் வருகிறது.

இருந்தாலும் இன்று பிரிந்துபோயிருக்கும் ஆந்திரர்கள் சீக்கிரம் நம்மைப் பிரித்த அந்த ஆதிபத்தியத்தை எதிர்ப்பர். அந்த நிலைமை கட்டாயம் ஏற்படும். டெல்லியுடன் மோதப்போகும் அவர்கள், கோயம்பத்தூருக்கும், குண்டூருக்கும்தான் ஒற்றுமை இருக்க முடியுமே ஒழிய, கர்னூலுக்கும் டெல்லிக்கும் நல்லெண்ணம் ஏற்பட வழியில்லை என்பதை, விரைவில் உணர்வர்.

ஆராய்ச்சியும் அறிவுப் பிரச்சாரமும் வளர வளரத் திராவிடத்தின் உளமும் வாழ்வும்தான் அவர்கள் கண்முன் தெரிந்திடும்.

வடநாட்டின் வைதீகமும், ஆரியக் கலாச்சாரமும் அவர்கள் மனதை விட்டு அகலும். அந்த நன்னாளில் நம்முடைய ஜீவாதாரக் கொள்கையான 'திராவிட நாடு' தானே உருப்பெறும்.

ஆந்திரரும், தமிழரும், மலையாளியும், கன்னடியரும் தங்கள் தேவைக்கு வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்நோக்கி இருப்பதை விட்டு விட்டு, திராவிடக் கூட்டாட்சியில் ஒன்று கூடி, நாம் வாழும் நாட்டை, நம் இனத்தைக் காக்கும் வரிசையில் போற்றி வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபடுவர். அந்த நன்னாளை எதிர்நோக்கி நம்பிக்கையோடு, ஆந்திர சகோதரர்களுக்கு நல் வாழ்த்துக் கூறுகிறோம்.

★

அவர் ஒரு ஆதிக்கக்காரர்

யாராய் இருந்தாலும் சரி, சந்து முனைச் சண்டியனிலிருந்து சப்ர கூட மஞ்சத்தில் சரசமாடும் சடையாண்டி வரையிலும்; வயிற்றுக்கு வாழ்வளிக்க வாய்பிளந்து நிற்கும் வாதனிலிருந்து, வாய் சலிக்கும் வரை வரட்டு வேதாந்தம் பேசியதால் தொண்டை வரட்சியேடுத்ததேயென்று கண்டுப்பொடி கலந்து காய்ச்சிய பாலைக் கண்ணை மூடிக்கொண்டு வரவேற்கும் வாய்ச்சவடால்கள் வரையிலும்; மைதானத்தில் மருந்து விற்கும் மாயாண்டியிலிருந்து மண்டபம் ஏறிக்கண்டதைப் பேசும் கனபாடிகள் வரையிலும்; அன்றாடம் காய்ச்சியிலிருந்து அரசபோகத்தில் இருப்பவன் வரையிலும்; அடியாளிலிருந்து தடியாட்சி புரிபவன் வரையிலும்; மண்வெட்டி எடுப்பவனிலிருந்து மாடமாளிகையில் மகோன்மதத்தனாக வாழ்பவன் வரையிலும்; எங்கிருந்தாலும் சரி, விருதுநகரிலிருந்து திருப்பரங்குன்றம் வரையிலும்; மீஞ்சூரிலிருந்து திருச்செங்கோடு வரையிலும்; வார்தாவிலிருந்து அலகாபாத்வரையிலும், பிர்லா மாளிகையிலிருந்து பிரார்த்தனை செய்யும் மைதானம் வரையிலும்; யாராய் இருந்தாலும் சரி—எங்கிருந்தாலும் சரி, அவர்களை அங்கெல்லாம் ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் கட்டாயம் இருந்தே தீருவர். இது ஒன்றும் புதிதல்ல—அனுபவ உண்மை

ஆனால், சிலர் இருக்கிறார்கள்—999 பேரால் வெறுக்கப்பட்டு ஒருவரால் ஆதரிக்கப்படுபவர்கள். பதினாயிரம் பேர் அவர்களை எதிர்க்கிறார்கள் என்றால், பத்துப்பேர் ஆதரிக்கிறார்கள் என்று பொருள். இது கூட அவ்வளவு மோசமல்ல. ஆயிரத்துக்கொருவராவது ஆதரிக்க இருக்கிறார்களே என்ற திருப்தியேற்படும்.

ஆனால், இன்னொரு வகையினர் இருக்கின்றனர்—அவர்கள் மொத்தத்தில் ஒரு பத்து அல்லது பன்னிரண்டு பேரால்தான் ஆதரிக்கப்படுகின்றனர். மற்ற அனைவரும், அதாவது, ஒரு மாகாணத்தில் ஆறு கோடி பேர் இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம் இந்த ஆறு கோடி பேரில், பத்து அல்லது பன்னிரண்டு பேர்தான் அவர்களை ஆதரிக்கின்றனர் என்று பொருள்.

இந்த வகையினரைச் சேர்ந்தவர் தானும் நமது மாகாண முதலமைச்சர் ஆச்சாரியார்.

இதனை நாம் கூறவில்லை. அவருடன் இருந்து, மந்திரி வேலை பார்த்து, இப்போது ஏற்பட்ட ஆந்திரப் பிரிவினையின் காரணமாகப் பதவியிலிருந்து விலகும் டாக்டர் கிருஷ்ணராவ் அவர்கள் "ராஜாஜிக்குப் புகழ்மாலை" என்ற தலைப்பில் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்.

> "வெளியிலிருந்து பார்ப்பதற்கு ராஜாஜி எல்லார்மீதும் ஆதிக்கம் செலுத்துபவர்போல் தோன்றியபோதிலும், உண்மையில், மந்திரி சபையில் உள்ள தம் சகாக்களின்கருத்துக்களுக்கு மிகுந்த மதிப்பு தருகிறார்."

என்று கூறியுள்ளார். ஆச்சாரியார் எல்லார்மீதும் ஆதிக்கம் செலுத்துகிறார். ஆனால் தன்னுடைய சகாக்கள் கூறும் யோசனைகளுக்கு மதிப்புத் தருகிறார். இதன் பொருள் என்ன? மந்திரி சபையிலும் எல்லாருடைய யோசனைகளுக்கும் அவர் மதிப்புத் தருவதில்லையாம்; அவருடைய சகாக்களின் யோசனைகளுக்கு மட்டுமே மதிப்புத் தருகிறாராம். யார் அவருடைய சகாக்கள் என்ற விபரத்தை டாக்டர் ராவ் தரவில்லை. அந்த விபரத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற கவலை நமக்கும் இல்லை. ஆச்சாரியார் ஒரு ஆதிக்கக்காரர்—இதனை அவருடன் இருந்து பணியாற்றிய ஒருவர் தெரிவிக்கிறார்; அல்ல, அல்ல, சர்டிபிகேட் வழங்குகிறார். பள்ளியில் பயிலும் மாணவன் பள்ளியைவிட்டு விலகும்போது அவனுக்குச் சர்டிபிகெட் வழங்கப்படுவது போல், ஆனால், அதற்கு எதிர்மாறாக, ஆச்சாரியார் மந்திரி சபை என்ற பள்ளியில், ஆதிக்கம் எப்படிச் செலுத்துவதென்று பயிற்சி பெற்று விலகும் மாணவ மந்திரி டாக்டர் கிருஷ்ணராவ் அவர்கள் உபாத்தியாய மந்திரி ஆச்சாரியாருக்குச் சர்டிபிகேட் வழங்கியிருக்கிறார். இந்தச் சர்டிபிகேட்டோடு வெளியே செல்லும் ஆச்சாரியாரை, இனி, (நாம் நீங்கலாக, நாம் தான் ஆச்சாரியார் ஒரு ஆதிக்கக்காரர் என்று பலகாலமாகவே கூறிவருபவர்களாயிற்றே) எல்லோருமே "ஆதிக்க ஆச்சாரியாரே வருக! நம் வாவு ஆதிக்கம் புரிந்து மேலும் மேலும் நல்ல செல்வாக்கை உண்டாக்கித் தருவதாக" என்று கூறி வரவேற்க வேண்டும் என்பது, மந்திரி கிருஷ்ணராவ் அவர்களின் விருப்பம் போலும்!

ஆச்சாரியார் ஒரு ஆதிக்காரர்—அவர் மக்கள் குரலை மதியாத மமதையாளர்—தான் நினைத்ததைச் செய்து முடிப்பேன் என்று முரட்டுப்பிடிவாதம் செய்பவர்—ஜனநாயகத்துக்குப் புறம்பானவர் என்று நாம் கூறிவரும் உண்மையை, அவருடனிருந்து பணியாற்றிய ஒருவர்—நம்முடைய எதிர் கூடாரத்தில் இருப்பவர் ஒளிவு மறைவின்றிக் கூறுவதைக் காண மகிழ்கிறோம்—நன்றி செலுத்துகிறோம்.

★

நமது அருமைத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் துணைவியார் டாக்டர் விசாலாட்சி அவர்கள், கடந்த செப் 11-ந் தேதியன்று, அமெரிக்காவுக்குச் சென்றார்கள். குழந்தை நலப் பாதுகாப்பில், மேற்கொண்டு மருத்துவப் பயிற்சி பெற சென்றுள்ளார்கள். அவர்களுக்கு நம்முடைய வாழ்த்துகள்.

தனி ஆந்திரம்—சரித்திரக் குறிப்புகள்

ரதன மக்கள்

தமிழர்கள் போல, ஆந்திரர்களும் கவும் புராதனமான மக்களாவர். மு. 300-ம் ஆண்டிலேயே ஆந் ரர்களைப் பற்றி, சரித்திரத்தில் றிப்பிட்டுள்ளது.

சந்திரகுப்த மௌரியர் காலத்தி லயே, ஆந்திரர்கள் தனி அரசு த்திவந்திருக்கின்றனர். மௌரிய ன்னனின் இராணுவத்தைவிட, ம்பொருந்திய இராணுவம் பெற் ருந்தவர்கள் ஆந்திரர்தான்.

அஜந்தா குகை கல்வெட்டுகளி ல், ஆந்திரர் ஆட்சியைப் பற்றிய கவல்கள் காணப்படுகின்றன.

ழர்—ஆந்திரர் உறவு

ஆந்திரர்கள் பேசும் தெலுங்கும், வர்களுடைய கலாச்சாரமும், மிழர்களிடையேயும் பரவ ஆரம் த்தன. முஸ்லீம்களின் படை டுப்பு அடிக்கடி ஏற்பட்ட காலத் ஆந்திரர்கள், தஞ்சையில் தஞ்ச டந்திருப்பதாக சரித்திரத் தக ்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் வாழ்ந்த சங்கீத தைகள், தெலுங்கிலேயே பாட்டு க் 'கவனம்' செய்துள்ளனர். விஷயங்களில், தமிழர்கள்— லுங்கர்கள் என்ற வித்தியாசமே ருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்ப் சினிமா உலகில் நடிக, நடிகை ின் பெரும்பாலோர் ஆந்திரர் ள்!

ஞாபகத்திற்கு!

து ஆந்திர அரசின் விஸ்தீரணம் 1,929 சதுர மைல்களாகும்; ன் மக்கள் தொகை மூன்றரை டியாகும். இதில் 30 முனிசி லிடிகள், 45 முக்கிய நகரங்கள், பஞ்சாயத்துகள் உள்ளன. ஆந் வின் வருமானத்தில், மூன்றில் ண்டு பங்கு, விவசாயத்திலிருந்து கிடைக்க வேண்டும்.

திரப் புகழ்பெற்ற இடங்கள்

ஆந்திர தேசத்தை, கி. மு. 300 ல் கி. பி. 600 வரை ஆந்திர னர்கள் ஆண்டுவந்திருக் றனர். எல்லா ஆந்திர மன்னர் ம் கலைகளை ஆதரித்து வந்திருக் கின்றனர் இவர்கள் காலத்தில் ஏற் பட்ட சில சரித்திர பிரசித்தி பெற்ற இடங்கள் குறிப்பிடத்தகுந்தவை.

ஹம்பியிலுள்ள கற்தேர் மண்ட பங்கள், லபாக்ஷி என்ற இடத்தி லுள்ள வர்ண ஓவியங்கள் மிகவும் பிரசித்திமானவை. விசாகை ஜில்லா வில், மலையிலே குடைந்த புத்த ஸ்தூபம், சங்கரம் என்ற இடத்தில் உள்ளது. குண்டூர் ஜில்லாவில் பட்டி புரோலு என்ற இடத்தில் புத்த மத கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன.

நாகார்ஜுனகொண்டா மலை, குண் டூர் ஜில்லாவில், பல்நாடு தாலுக்கா வில், கிருஷ்ணா நதிக்கரையில் உள் ளது. புத்த மத சம்பந்தமான அநேக சிற்பங்களை அங்கு காண லாம். இவைகள் எல்லாம் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணா நதிக்கரையில், அமரா வதி என்ற இடத்தில், புத்த ஸ்தூ பங்கள் இருந்து வருகின்றன. 1797-ல், இவைகளை கர்னல் மெகன்ஸி என்பவர்தான் முதன் முதலில் கண்டுபிடித்தார். இந்த இடம், "தரணிக்கோட்டை" என் றும் வழங்கிவந்தது.

இங்குள்ள ஸ்தூபங்கள், கி. மு. 200-வது ஆண்டில் கட்டப்பட் டிருக்க வேண்டும். இவைகள் 13-வது நூற்றாண்டு வரை நல்ல நிலைமையிலே இருந்திருக்கின்றன. அமராவதி சிற்பங்களில் அநேகம், பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலை யில் உள்ளன.

முக்கிய தகவல்கள்

கர்னூல்: புகழ்பெற்ற நல்ல மலைக்காடுகள் அடங்கியது; ஜமுக் காள நெசவுக்குப் பெயர்பெற்றது; சிலேட்டுகள் உற்பத்தி அதிகம்.

கடப்பை: இலந்தம்பழம் மிகவும் பிரசித்தி பெற்றது; நெசவுத் தொழில் அதிகம்.

அனந்தபூர்: தர்மாவரம் பட்டு நெசவுக்குப் பேர்போனது; கம்பளி நெசவும் அதிகம்.

பெல்லாரி: வெல்லம் காச்சும் தொழில் அதிகம்; கைத்தறி நெசவு அதிகம்.

நெல்லூர்: நெல்லூர் பசுக்கள் உலகம் பிரசித்தமானவை; இப் பசுக்கள், யுனைட்டெட் ஸ்டேட்சில் இருக்கின்றன; தடா, பகாலா ஆகிய இடங்களில் உப்பளங்கள் உள்ளன.

சித்தூர்: கைத்தறி நெசவு அதி கம்; விளக்கெண்ணெய் தரும் வித் துக்கள் நிறைய விளைகின்றன.

குண்டூர்: குண்டூர் புகையிலை. சர்வதேசப் புகழ் வாய்ந்தது.

மேற்கு கிழக்கு கோதாவரி: பல வியாபார கேந்திரம்; கோயில்கள் நிறைந்த இடம்.

கிருஷ்ணா: பெரிய வியாபாரக் கேந்திரம்; இதிகாசப் புகழ்பெற் றது.

விசாகப்பட்டினம் — கோதளம்: இவை, முன்பு ஒன்றாக இருந்தது, இப்போது தனித் தனியாகப் பிரிக் பட்டுள்ளது. விசாகையில் தான் கப்பல் கட்டும் தளம் உள்ளது.

தலைநகர்

ஆந்திர நாட்டின் தற்காலிக தலை நகராக ஆகும் பெருமை, கர்னூலுக் குக் கிடைத்துள்ளது. இதில் 14 நகரங்களும், 839 கிராமங்களும் உள்ளன. இந்த ஜில்லாவில், சமு தாய நலன் திட்டம் 225 கிராமங் களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தனி மாநிலமாக உருவாகும் ஆந் திராவில், 12 ஜில்லாக்கள் இருக்கும்; அவை, 1. கர்னூல், 2. பெல்லாரி, 3. அனந்தபூர், 4. கடப்பை, 5. நெல்லூர், 6. கிழக்கு கோதாவரி, 7. மேற்கு கோதாவரி, 8. கிருஷ்ணா, 9. குண்டூர், 10. விசாகப்பட்டினம், 11. ஸ்ரீகாகுளம், 12. சித்தூர்.

[சித்தூரில், தமிழ் தெலுங்கு பிரதேசங்களின் எல்லையை நிர்ண யிக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட விருக்கிறது பெல்லாரி ஜில்லாவில் கன்னடம் பேசப்படும் தாலுக்கா களான அதோனி, ஆலூர், ராய துர்க் இம்மூன்றும் மைசூர் ராஜ்யத் துடன் சேர்க்கப்பட்டுவிட்டது.]

பட்டினி ஊர்வலம் தரும் பாடம்

இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள், வரிசை வரிசையாக வந்தனர்.

பலப் பல கிராமங்களிலிருந்தும் புறப்பட்டு வந்தனர்—காய்ந்தவயிற்றினர், வரண்ட தலையினர், பஞ்சடைந்த கண்ணினர்.

பலப் பல மைல்களைக் கடந்து வந்துகொண்டிருந்தனர், கல்கத்தா நோக்கி.

பல கிராமங்களையும் கடந்து, தங்களைக் காப்பாற்றவேண்டும், ஆளவந்தார்கள் எனக்கேட்டுக்கொள்ள வந்துகொண்டிருந்தனர்.

மக்களாட்சி நடைபெறும் இந்நாட்களிலே, ஆளவந்தாரிடம் தங்கள் நிலைமையினைக் கூறிக்கொள்ள கிளம்பினர், தரித்திரத் தேள் கொட்டியதால் துடித்த மக்கள்.

அந்தக் காட்சியை நாம் மனக் கண் முன்னால் நிறுத்திப் பார்த்தாலே உருக்கமானதாகத் தெரியும்.

கிளம்புவோமா?

எங்கே?

தலைநகருக்கு?

ஏன்?

ஆளவந்தார்களைப் பார்த்து...!

பார்த்தால் பயன்?

பார்த்துக் கூறுவோம், நமது பரிதாபமான நிலைமையை!

சொன்னால் பரிகாரம் கிடைக்குமா?

நாம்தானே இந்தச் சர்க்காரை அமைத்தோம். நமது பேச்சைக் கேட்க மறுப்பரோ?

என்னவோ, எதற்கும் போய்ப் பார்ப்போம்.

இவ்விதம் பேசிக்கொண்டு, பட்டிதொட்டிகளிலிருந்தெல்லாம் நடந்து சென்று கல்கத்தாவிலிருந்து 24 மைலுள்ள நவ்பக்னனில் — கால் கடுத்த காரணத்தால், நடக்க முடியாததால், இரயில் ஏறிச் செல்ல முயற்சித்தனர்.

இதனைத் தடுத்து நிறுத்த போலீஸ் பட்டாளம் வந்தது.

கல்கத்தா அருகே நடைபெற்ற இந்தக் குடியானவர்கள் ஊர்வலக் காட்சி, காங்கிரசாட்சி, மக்களை எத்தகைய வாழ்க்கையிலே வைத்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

ஏழை பங்காளர்களல்லவா ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்—தேனும் பாலும் ஓடும் என்று நல்லவாக்குக் கொடுத்துவிட்டு — வந்தவர்களல்லவா! அவர்கள் ஆட்சியிலே, கிராமமும் நகரமும் செழிப்புற்று, மக்கள் வாழ்க்கை வளம் பெற்றல்லவா இருக்க வேண்டும்! ஆனால், ஆட்சிப் போக்கு பட்டினிப்பட்டாளத்தைத் திரட்டுவதாக இருக்கிறது என்பதைத்தான் கல்கத்தா நோக்கிச் சென்றுகொண்டிருந்த குடியானவர்கள் ஊர்வலம் எடுத்துக் காட்டுகிறது.

மஞ்சள் பெட்டியை நிரப்பி, காங்கிரஸ் வெற்றியடைந்ததும், வெற்றிக்கொண்டாட்டம் நடத்திய மக்களே, இப்போது வேதனையைத் தெரிவித்துக்கொள்ள, பட்டினிக் கொடுமையிலிருந்து மீள்வதற்குப் பரிகாரம் கேட்க, ஊர்வலம் வந்தனர்.

அவர்களில் இருநூறு பேரைக் கைது செய்தனர் போலீசார். அவர்களில் நால்வர் எம். எல். ஏக்கள்.

கல்கத்தாவில் நடைபெற்ற அதே விதமான ஊர்வலம் இங்கு நாம் நடத்தினாலும், சர்க்கார், ஊர்வலம் என்று கூறமாட்டார்கள் — அக்ரகார அழிப்புப் படை என்றோ, நாத்திகக் கூட்டம் என்றோ, கூறி துப்பாக்கியை ஏவி இருப்பர். நாம் எதைச் செய்தாலும்தான் நமது சர்க்கார். 'போடு தடை' என்று கூறிவிடுகிறதே!

இந்தப் பட்டினிப்பட்டாளத்தை போலீசார், டல்ஹௌசி சதுக்கத்துக்கு வெளியே தடுத்து நிறுத்தினார்கள். உடனே அவர்கள் தெருக்களில் உட்கார்ந்துகொண்டு நகர மறுத்தனர்.

இத்தகவல், ராஜ்ய முதல் மந்திரி பி. ஸி. ராய்க்கு தெரிவிக்கப்பட்டதும், பட்டினிப் பட்டாளத்தின் தூதுக்கோஷ்டியை பேட்டி காண சம்மதித்தார். அதன்பேரில் ஐக்கிய பஞ்ச தடுப்பு கமிட்டி அவரிடம் அதன் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தது.

சட்டபூர்வமாக ரேஷன் அமுலிலுள்ள பகுதிகளில் அரிசி விலையை சேருக்கு 2 அணாவிலிருந்து 7 அணா வரை குறைக்க சர்க்கார் முடிவு செய்துள்ளதாக தூதுகோஷ்டி தலைவர்கள், முதல் மந்திரியுடன் பேசிவிட்டுத்திரும்பியதும் அறிவிக்கவே, கூடியிருந்தவர்கள் ஆனந்த ஆரவாரம் செய்தனர். தங்கள் கோரிக்கை ஓரளவு வெற்றி பெற்றது குறித்து மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால், சர்க்கார் அறிக்கையோ, மத்திய மந்திரி ஜனாப் கித்வாயுடன் விவாதம் நடத்தியதையொட்டி இவ்வாறு விலைகளைக் குறைக்க தாங்கள் முடிவு செய்ததாகக் கூறுகிறது. பட்டினிப் பட்டாள ஊர்வலத்தைக் குறித்து பிரஸ்தாபிக்கவே இல்லை.

சர்க்கார் அறிக்கை திரித்துக் கூறப்பட்டபோதிலும், ஓரளவு மக்கள் மகஜரை வங்க ஆட்சி மதித்து நடந்ததைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

என்றபோதிலும், இப்படிப்பட்டினிப் பட்டாளங்கள் புறப்படுமளவுக்கு காட்டைப் புரையோடிப் போகச் செய்து கொண்டிருக்கும் ஆட்சி, நெடுநாளைக்கு நிலைத்திருந்ததில்லை என்று சரித்திரங்கள் நமக்குச் சான்று பகர்கின்றன.

இதனை, இங்குள்ள நவீன ஜனநாயக சர்க்கார் உணரவேண்டும்! ஆறாண்டுகளாக ஜனநாயக ஆட்சியை நடத்தி வருவதாகக் கூறிக்கொள்ளும் காங்கிரஸ் சர்க்காரின் தாறுமாறான ஆட்சியை நோக்கும்போது, எங்கே, எதிர்க்கட்சிக்காரர்கள் கூறும் யோசனைகளையோ கருத்துக்களையோ உணரப் போகிறார்கள் என்ற முடிவுக்கே நாம் வரவேண்டி இருக்கிறது.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

ல்லை. மகாமேரு, ஒரு மலை; அதி க்கட்டும்; அதைப்பற்றி யாரும் லைப்படமாட்டார்கள். ஆனால், ந்த மலையை மத்தாகச் சுற்றுவதற் ப் பயன்படுத்தப்பட்ட கயிறு ருக்கிறதே—ஆதிசேஷன் என்ற ந்தப் பாம்பு! அதைப்பற்றி, அந் க்காலத்திலேயே பெரிய சண்டை ந்ததாகக் கேள்வி, அதாவது, தந்தி.

பாற்கடலுக்குள் மறைந்துகிடந்த றிவை வெளியே எடுப்பதற்காக, காமேரு மலையை மத்தாக்கிக் காண்டுவந்து பாற்கடலில் நிறுத் னார்கள். ஆனால், அதனை மத்தா ச் சுழற்றுவதற்குக் கயிறு கிடைக்க ல்லை. அங்குமிங்கும் சுற்றிப்பார்த் ார்கள்; அதே பாற்கடலில், சிறிது தாலைவில், ஒரு கயிற்றுச் சுருள் டப்பதைப் பார்த்துவிட்டார்கள். ரவச மேலிட்டால் பாய்ந்து சென்று அந்தக் கயிற்றைக்கொண்டு ந்து, மகாமேரு என்ற மலையைச் ற்றிப் பிடித்துக்கொண்டார்கள்; லையை மத்தாகச் சுழற்றிக் கடைய ம் தொடங்கிவிட்டார்கள். கடை ம் வேகத்தில், பாம்பு வலி பாறுக்கமுடியாமல், தன்னிட ருந்த விஷத்தை வெளியே கக்கி ட்டது. அப்பொழுதுதான், அது ரு பாம்பு என்பதைத் தேவர்கள் காங்கிரஸ்காரர்கள்) உணர்ந்தார் ள். உடனே, சிவபெருமானிடம் ஆச்சாரியாரிடம்) சென்று "இந்த ஷத்தை நீங்கள்தான் சாப்பிட்டு ங்களைக் காப்பாற்ற வேண்டும்" ன்று தேவர்கள் கேட்டுக்கொண் ார்கள். சிவபெருமானும், "சரி ட்டும்; நானே சாப்பிடுகிறேன்" ன்று கூறி விஷத்தை விழுங்கிவிட் ார். இதைப் பார்த்துக்கொண் ருந்த பார்வதி தேவி (பக்தவச்சல ம் பிறரும்) "நாதா நீர் விஷம் ாப்பிட்டுவிட்டால், என்கதி என்ன வது? நான் முண்டைச்சியாய்விடு வனே! எனக்கு மாங்கல்யப்பிச்சை ருங்கள்" என்று வேண்டிக்கொள் வே, பரமசிவன் பார்வதியை (பக்த ச்சலத்தை) நோக்கி, "நீமட்டுமா ன்னை நம்பி இருக்கிறாய்? இதோ ட்டியல் பார்! தேவேந்திரன் (நிதி ந்திரி சுப்ரமண்யம்) அக்னிதேவன் மாணிக்கவேலர்) வருணதேவன் அரக்கோணம் பக்தவத்சலு) வாயு தேவன் (விஞுபகம்) யமதேவன் (பி.டி. இராசன்) சூரியதேவன் (ராஜாராம்) இன்னும் எத்தனையோ தேவாள் என்னை நம்பி இருக்கிறார்களே! அவர்களையெல்லாம் காப்பாற்றியாக வேண்டுமே, மன்மதன் (காமராசர்) போன்ற போலித் தேவர்கள் தரும் விஷத்தை நான் ஒருபோதும் சாப்பிட்டுவிடமாட்டேன். இதோ அந்த விஷத்தை என் கழுத்தில் தாங்கிக்கொண்டேன். மன்மதனும் மனம் குளிர்வான். நீயும் எனது உண்மையான மற்றத் தேவர்களும் நல்வாழ்வு வாழ்வார்கள்" என்று பரமசிவன் கூறினாராம்.

இந்தச் சம்பவம் இப்படியிருக்க, இலட்சுமிதேவியாரோடு உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்த மகாவிஷ்ணுவுக்குத் தன்னுடைய படுக்கை பறிபோனது தெரியாமற் போய் விட்டது. பிறகு இருவரும் பாற்கடலில் விழுந்து தவித்தபோது தான் விஷயம் புரிந்தது. அதாவது, மகாவிஷ்ணுவின் படுக்கையாகப் பயன் பட்டுக்கொண்டிருந்த ஆதிசேஷன் என்ற பாம்பு எங்கோ — எப்படியோ போய்விட்டதென்ற விபரம் தெரிய வந்தது. இந்தச் சமயத்தில், மகாவிஷ்ணு அவர்களுக்கு நீச்சல் தெரியாத காரணத்தால், தண்ணீருள் மூழ்கும் தருவாயில், எதிரே மிதந்து கொண்டு வந்த ஒரு ஆலிலையைப் பார்த்ததும், அதில் ஏறி உட்கார்ந்துகொண்டார். இதைப் பார்த்ததும் மகாலட்சுமி தேவிக்கு மகாகோபம் வந்து விட்டதாம் "நான் ஒரு பெண் என்பதைக் கூட மறந்து, நீர் மட்டும் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீரே" என்று கேட்டு விம்மி விம்மி அழுதார்களாம் அந்த அம்மையார். மகாவிஷ்ணுவா இதற்கெல்லாம் அஞ்சுபவர்! உடனே அவருக்கொரு யோசனை உண்டாயிற்று! 'தேவி! அஞ்சாதே! எனக்குக் கிடைத்த ஆலிலையோ மிகவும் சிறியது. ஆதிசேஷனைப்போல் அகலமோ நீளமோ இல்லை. இந்த இலையில் நான் உட்காருவதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்கால்களைக்கூடச் சரியாக நீட்டிக் கொள்ள முடியாமல், ஒரு காலை மடக்கி அதனை என் வாயில் வைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறேன். இந்த இலையில் உன்னையும் இதில் உட்கார வைப்பதென்பது சிறிதும் முடியாத காரியமாகவே இருக்கிறது. எனவே, நான் ஒரு யோசனை சொல்கிறேன், கேள். நீ இந்தத் தண்ணீரைப் பிளந்து கொண்டு பாதாளம்வரை சென்று, அங்கிருந்து கிளம்பிப் பூமியைப் பிளந்து கொண்டு, மிதிலை என்ற நகரை அடைந்து, ஜனகன் என்ற மன்னன் ஆதரவில் வளர்ந்து கொண்டிரு நான் இந்த ஆலிலையையே தெப்பமாகக் கொண்டு எப்படியாவது கரை சேர்ந்து, அலகாபாத்தை அடுத்த அயோத்திக்கு மன்னனாக இருப்பேன். அப்போது, உன்னை மறுபடியும் மணஞ் செய்து கொள்கிறேன். என்று சொல்லி முடிப்பதற்குள் ஒரு கடலலை வந்து ஆலிலையை அடித்துக்கொண்டு போய்விட்டது.

இது இப்படியிருக்க, பூமா தேவிக்கு ஒரு சந்தேகம் வந்து விட்டதாம் 'என்னைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆதிசேஷன் எப்படிப் பாற்கடலுக்குப் போய் அமிர்தம் கடைவதற்குப் பயன் பட்ட" தென்ற சந்தேகம் ஏற்பட்டு, குனிந்து பார்க்கவே, ஆதிசேஷன் வழக்கம் போல தன்னுடைய தலைகளில் ஒன்றால் மட்டும் பூமியைத் தாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு நிம்மதியடைந்து "அப்பாடா" என்று ஒரு பெருமூச்சு விட்டதாம்.

இது இவ்வாறாக, ஆதிசேஷனை மோதிரமாக அணிந்திருக்கும் உமா தேவியாருக்கும் சந்தேகம் ஏற்பட்டு, சிறுவிரலைப் பார்க்க, ஆதிசேஷன் அம்மையாரின் விரலில் மோதிரமாகச் சுருண்டு கிடப்பதைக் கண்டு, ஆதிசேஷன் அமிர்தம் கடைவதற்குக் கயிறாகப் பயன் பட்டதாகயாரோ கயிறு திரித்து விட்டார்கள் என்று கூறி ஒரு முறை கலகலவென்று நகைத்து விட்டு இறைவியொரு பாகமாக அமர்ந்து விட்டார்களாம் அந்த அம்மையார்.

இனி, "ஆதிசேஷன், பாற்கடலில் தேங்கிக்கிடந்த அறிவைக் கடைந்தெடுப்பதற்குக் கயிறாகப் பயன்பட்டதாகப் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறதே, நீர் ஏன் அந்தச் சம்பவத்தை உம்முடைய பாடலில் சேர்க்கவில்லை" என்று 'சுடு பழம்' தந்த வேலப்பர் கேட்டாராம். வேலப்பர் ஔவைக்கு மைத்துனராம். ஔவையின் தங்கை வள்

ளியை இரண்டாவது தாரமாக வேலப்பர் தம்முடையதமயனார்கணபதியின் கூட்டுமுயற்சியால் திருமணம் செய்து கொண்டதாகவும் ஒரு கதையுண்டு—புராணத்தில்.

வேலப்பர் இவ்விதம் கேட்டது ஔவைக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. "ஆதிசேஷனைப் பற்றிய வரலாறு என்னைவிட வேறு யாருக்குத் தெரியும்? நான்தானே அந்த அரவின் பெருமையை அகிலமெலாம் அறியச் செய்தவள். அப்படியிருக்க எனக்குத் தெரியாத ஒன்றைப் புராணம் பாடியவர்கள் தங்களுக்குத் தெரிந்தாக எப்படிக் கூறினார்கள்? பொய்! பொய்!! முற்றிலும் பொய்!!! புராணத்தையே புளுகுமூட்டையாக்கும் புல்லர்கள் இவர்கள். இதோ என்னுடைய பாடல்,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரிய மாலுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் றோன்றினோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கொரு தலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள் ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

என்று, அந்த ஆதிசேஷனைப்பற்றி மிக மிக விளக்கமாகப் பாடியிருந்தும், என்னை வேண்டுமென்றே அவமானப்படுத்தும் முறையில் சிலர் இப்படி ஒரு புராணத்தை எழுதியிருக்கின்றனர்." என்று ஔவையார் பெரிதும் கோபப்பட்டார்களாம். இந்தச் சமயத்தில் எனக்கொரு யோசனை தோன்றிற்று. அதாவது, ஔவையார் தம்முடைய பாடலைப்பற்றி இவ்வளவு பிரமாதமாகப் பேசுகிறாரே, இந்தப் பாடலை ஔவையார் எப்படிப் பாடியிருக்கிறார், பார்க்கலாம் என்று எண்ணத்துடன் ஒரு டாக்கீசுக்குப் போயிருந்தேன். மேற்படி பாடலையும் கேட்டேன் — ஔவையாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைவிட பன்மடங்கு அதிகமான சந்தேகம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. ஔவையார் வாக்கே பொய்தானோ என்றுகூட எண்ணவேண்டியதாயிற்று. அந்தப் பாடலைப் பாடச் சொன்ன வேலப்பர் நாவல் மரத்தின்மீது உட்கார்ந்திருக்கிறார். ஔவைப்பாட்டி கீழே நின்றுகொண்டு வேலப்பரை அண்ணாந்து பார்த்தபடி, அந்தப் பாடலைப் பாடுகிறார். படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நான் மயக்கமாகக் கீழே விழுந்து விடப் போனேன். பக்கத்திலிருந்தவர் என்னை விழவிடாமல் தடுத்து "என்ன விசேஷம்" என்று கேட்டார். நான் கொலை! கொலை!! என்று கூச்சல் போட்டேன் — சினிமாக் கொட்டகையே அதிர்ந்துவிட்டது. பிறகு நிதானம் வந்ததும், படமெடுத்தவர்கள் ஔவையாரின் பாடலைக்கொலை செய்துவிட்டனர் என்று அந்தப் பாடல் முழுவதையும் பாடிக் காண்பித்தேன்.

பக்கத்தில் நின்றவர்கள், "ஆமாம், 'புவனமோ நான்முகன் படைப்பு' என்பதிலிருந்து, 'கலசமோ புவியிற் சிறுமண்' என்பது வரையில் பாடப்படவில்லை" என்று கூறியதோடு, "ஔவையாருக்குப் பெருமை தரக்கூடிய பல நல்ல சம்பவங்களையெல்லாம் வேண்டுமென்றே நீக்கிவிட்டுத், தமிழ் மன்னர்களையும், ஏன், ஔவையாரையுமே கேவலப்படுத்தும் முறையிலல்லவா படமெடுத்திருக்கிறார்கள்" என்று முணுமுணுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நானும், 'தமிழே! தமிழ்நாடே! இதுவா உன் நிலை' என்று மனத்துக்குள் கூறிக்கொண்டேன்.

*

தேவர்கள்—இவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும், சினிமாத் துறை, அரசியல் துறை, வியாபாரத் துறை, புறந்திண்ணைத்துறை என்ற எந்தத் துறையில் இருந்தாலும் அரக்கர்களை எப்படியாவது இழிவுபடுத்துவதென்ற ஒரே நோக்கத்தோடுதான் இருந்துவருகிறார்கள், என்றபோதிலும், அவர்கள் செய்கின்ற எந்தக் காரியமும்-திராவிடர்களை அரக்கர்கள் என்று கூறுவது உட்பட எல்லாமே பொதுநலக் காரியம் என்று கூறுவதில்மட்டும் தவறுவதில்லை.

பரமசிவன், தேவர்களால் கொடுக்கப்பட்ட ஆலகால விஷத்தைச் சாப்பிட்டுச் சந்தோஷமாக இருந்தது போலவே, ஆச்சாரியாரும் அரக்கர்களாகிய நாம் கொடுக்கும் விஷத்தைச் சாப்பிட்டு, அந்த விஷம் நீங்குவதற்கு இன்றைய தேவர்களின் (காங்கிரஸ்காரர்களின்) அன்புப் பாலைக் குடிக்கிறாராம்.

அன்றைய பரமசிவனுக்குத் தேவர்கள் விஷம் கொடுத்தார்கள்.

இன்றைய பரமசிவனுக்கு அரக்கர்கள் விஷம் தருகிறார்கள். காரணம் என்ன? ஒருவேளை அன்றைய தேவர்கள்தான் இன்றைய அரக்கர்களாக மாறி விட்டார்களோ. என்னவோ, யார் கண்டார்கள்!

அன்று விஷம் கொடுத்தவர்கள் இன்று பால் தருகிறார்கள்! காரணம் என்ன?

புராணம் எழுதியவர்கள், என்ன காரணத்தோலோ ஒன்றை மறந்துவிட்டார்கள். அன்றும் அரக்கர்கள் தான் ஆண்டவனுக்கு விஷம் கொடுத்தார்கள் என்று எழுதாமல், தேவர்கள் கொடுத்தார்கள் என்று எழுதிவைத்து விட்டார்கள். இதனை மாற்றி எழுதியிருந்தால் இப்போது நாம் தரும் ஆலகால விஷத்தைச் சாப்பிடும் ஆச்சாரியாருக்கும் அவர் கும்பலுக்கும் பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி இருக்கும் "பார்த்தீர்களா! அன்றும் அரக்கர்கள்தான் ஆண்டவனுக்கு விஷம் கொடுத்தார்கள்—இன்றும் அரக்கர்கள்தான் நமது நவீன பரமசிவனும் ஆச்சாரியாருக்கு விஷம் கொடுக்கிறார்கள்" என்று கூறி அரக்கர்களை மேலும் மேலும் கேவலப்படுத்த முயல்வார்கள். ஆனால், புராணம் எழுதியவர்களும் சிற்சில உண்மைகளை ஒளிவு மறைவின்றி அப்படி அப்படியே எழுதிவைத்து விட்டார்கள்.

நாம் ஆச்சாரியாருக்கு விஷத்தைக் கொடுக்கிறோமா? நம்மிடம் ஏது ஆலகால விஷம்? ஆதிசேஷனும் ஒரு தே

...யிற்றே! தேவனிடம் இருக்கும் ...ஷம் அரக்கனிடம் எப்படி வர ...டியும்? ஆச்சாரியாருக்கு விஷம் ...நாமென்ன தேவர்களா? ஆச்சா ...யாரின் அகராதிப்படி நாம் தான் ...ரக்கர்களாயிற்றே! நம்மிடம் விஷ ...ருக்கக் காரணம் இல்லையே! ...ஷத்தை, யார், யாருக்குக்கொடுக் ...றார்கள்?

அன்றொரு நாள் கிரேக்க சர்க ...ர், சீர்திருத்தச் செம்மலாம் சாக் ...ரட்டீசுக்கு விஷம் கொடுத்துக் ...கொன்றதாகச் சரித்திரம் கூறு ...றது.

இன்று காங்கிரஸ் சர்க்கார், அதி ...ரத்தை விஷமாக்கி, அதனால், ...ட்டு மக்களின் நலன்களைக் கொலை ...செய்கின்றதென்ற குற்றச்சாட்டை ...ம்காங்கிரஸ் சர்க்கார்மீது சுமத்து ...றோம். இது விஷமாகத் தெரி ...றது ஆச்சாரியாருக்கு. எது ...ஷம்? யார் கொடுப்பது விஷம்? ...ன்பதை நாட்டு மக்கள் உணர்ந்து ...காள்ளும் காலம் தொலைவில் ...ல்லை என்பதை இன்றைய தேவர் ...ளும் அவர்களுக்குத் தலைவனாக ...ருக்கும் ஆச்சாரியார் என்ற ...ந்திரனும் தெரிந்து கொள்ள ...வண்டும்.

ஆச்சாரியார் சர்க்காரின் அதிகார ...ஷம் சிறு சிறு குண்டுகளாகச் ...செய்யப்பட்டுக், குன்றத்தூரில் ஒத் ...கை பார்க்கப்பட்டுத், தூத்துக் ...குடியில் நால்வரையும், சல்லக்குடி ...ல் அறுவரையும் கல்லறைக்கு ...னுப்பி இருக்கிறதென்பதை யார் ...றுக்கமுடியும்?

இந்தநிலையில் விஷம் தருபவர்கள் ...மாம்! நாம் தரும் விஷம் தேவர் ...ளின் அன்புப்பாலால் குறைகிற ...ம்! கூறுகிறார் ஆச்சாரியார்.

நாம் கேட்பது வாழ்வு—உரிமை. ...து விஷமாம்! விஷமம் என்று ...டக் கூறாமல், பச்சையாகவே ...ஷம் என்றே கூறுகிறார். வாழ் ...விக்கும்படி விண்ணப்பித்துக் ...கொள்வதும், உரிமை வழங்கும்படி ...வேண்டிக்கொள்வதும், விஷமா? ...ன் இந்த வேதியருக்கு இப்படிப் ...ட்ட விபரீத புத்தி பிறந்ததென்று ...தெரியவில்லை.

*

நாம் அரக்கர்களாம்! அவர்கள் ...தேவர்களாம்! கூறுகிறார் ஆச்சாரி ...ர் துணிச்சலோடு—கூச்சமின்றி!

"இப்போது மக்களின் மன மாகிய சமுத்திரத்தைத் தேவர் களும் அரக்கர்களும் கடைந்து வருகிறார்கள்"

என்று ஆச்சாரியார் கூறுகிறார்.

இந்தச் சமயத்தில் ஆச்சாரி யாருக்கு ஒன்று கூறுகிறோம். அன் பால் கூறுகிறோம். தமிழ் மக்களுக் கென்று இருக்கும் தனிப்பண்பின் பேரால் கூறுகிறோம்—விஷத்தைக் கக்காதீர் — வேதனையை உண்டாக் காதீர்-விபரீதபுரிக்குப்பயணமாகாதீர் —விவேகத்தைக்கைவிடாதீர்—வீண் வம்பை வளர்க்காதீர்—"அளவுகடந் தால் அமிர்தமும் நஞ்சாம்" என்ற பழமொழி உமக்கும் தெரியுமே! வேண்டாம் இந்தப்போக்கு! இதனை மாற்றிக் கொள்வது உமக்கு மட்டு மல்ல—பலருக்கும் நன்மை பயப்ப தாக இருக்கும் என்பதைத்தவிர விவேகிகளுக்குவிளக்கவுரைதேவை யில்லை என்று கருதுகிறேன். இது அறிவுரையல்ல—எச்சரிக்கை கலந்த யோசனை.

அவருக்குக் கிடைத்த மரியாதை

ஆந்திரம் தனியாகப் பிரிய வேண்டுமென்ற முயற்சி கடந்த நாற்பது ஆண்டுகளாக நடைபெற்று வந்தபோதிலும், கடைசி முயற்சி தோழர் பொட்டி சீராமுலு அவர் களால்தான் செய்யப்பட்டது.

ஆந்திரம் தனியாகப் பிரியும் வரை உண்ணாநோன்பிருக்கப்போகி றேன் என்று ஆணை கூறி, அதன் படி உண்ணாநோன்பை மேற் கொண்டு தோழர் பொட்டி சீரா முலு அவர்கள் உயிர் நீத்தார். இந் தச் சம்பவம் டில்லிவரை ஒருபெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது.

பொட்டி சீராமுலு உயிர் நீத்த மறுதினமே பண்டிதநேரு, ஆந்தி ரத்தைப் பிரித்துத் தருவதாக அறிக்கை விடுத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நடவடிக் கைகள், 1953 அக்டோபர் முதல் தேதியில் இருந்து ஆந்திரம் தனி யாக அரசோச்சும் நிலையை உண் டாக்கிவிட்டன.

தோழர் பொட்டி சீராமுலு அவர் கள் உண்ணாநோன்பை மேற் கொண்டிராவிட்டால், இவ்வளவு விரைவில் ஆந்திரம் பிரிந்திருக்க முடியாது.

எனவே, முதல் மரியாதை தோழர் பொட்டி சீராமுலுவுக்கே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது, அவருடைய பெயர் மக்கள் மனதில் எந்தக் காலத்திலும் பதிந்திருக்கக்கூடிய ஒரு நினைவுச் சின்னத்தை ஆந்திரத் தலைநகரில் உண்டாக்கி இருக்க வேண்டும். குறைந்தது, ஆந்திர சட்டசபை கூடும் இடமாவது "பொட்டி சீராமுலு மன்றம்" என்றாவது அமைத்திருக்கவேண்டும்.

ஆனால், இவருக்குக் கிடைத்த மரியாதை என்ன தெரியுமா? ஒரே ஒரு வளைவு! அவ்வளவுதான்.

1—10—53—ல் ஆந்திரம் தனி யாகப் பிரிந்ததையொட்டி நடை பெற்ற மகிழ்ச்சி விழாவின்போது, தலைநகராகிய கர்னூலில் பலவித அலங்காரங்கள் செய்யப்பட்டிருந் தனவாம்! அவற்றுள் ஞாபகார்த்த வளைவுகள் கட்டியதும் ஒன்றாம்! அந்த வளைவுகளில் ஒரு வளைவு பொட்டி சீராமுலுவின் பெயரால் போடப்பட்டிருந்ததாம். இந்த வளைவு நிரந்தரமானதல்ல திருவிழா முடிந்ததும் களைந்தெறிய வேண்டி யது. இதுதான், தன்னுடைய நாட் டின் நல்வாழ்வுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த ஒரு உத்தமருக்குக்கிடைத்த மரியாதை.

புது இராச்சியம் கிடைத்த புள காங்கிதத்தில், அதன் காரண பூத ரான தோழர் பொட்டி சீராமுலு அவர்களை ஆந்திரத் தலைவர்கள் மறந்து விடமாட்டார்கள் என்றும், அவருக்குத் தகுந்த மரியாதை செலுத்தத் தவறமாட்டார்களென் றும் நம்புகிறோம். நன்றிகொல்லும் பண்பு திராவிட மக்களுக்கு எப் போதுமே கிடையாது. எனவே, இதுவரை அவரை கவுரவிக்காவிட் டாலும், ஆந்திரம் பிரிந்த இப் பொழுதாவது அவருடைய பெயர் அனைவருடைய மனதிலும் இடம் பெறும்படியான ஒரு சிறந்த ஏற் பாட்டை ஆந்திரத்தலைவர்கள் செய் வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram